# பெண்மை.காம் மின் இதழ்

## புதுமையைத் தேடி...



காதல்!!!
சிறப்பு பக்கங்கள்



கர்ப்பிணிப் பெண்ணும்.. தாமரைத் தண்டும்...



Teach about Good Touch & Bad Touch



மகா சிவராத்திரி



Valentines Day Gift Ideas



மாசி மகம்

# புதுமையைத் தேடி...

**அன்பு பெண்மை தோழமைகளுக்கு வணக்கம்,**



**இதழ் 5**

மனித இனம் தோன்றிய போதே காதலும் தோன்றி விட்டது. மண்ணில் உயிர்களைப் புதுப்பித்து நித்தம் உயிர்ப்பித்துக் கொண்டிருக்கும் மாபெரும் சக்தி காதல்.

ஆண்டாள், வள்ளுவர், ஔவை முதல் பாரதி, ஷேக்ஸ்பியர் வரை காதலைப் பாடாத கவிஞர்களும் இல்லை; இலக்கியங்களும் இல்லை. பல யுகப் புரட்சிகளை உருவாக்கியது இந்த காதல்... ஹிட்லர் முதல் சார்லி வரை காதல் நுழையாத மனமே இல்லை.

உணர்வு பிழம்புகளின் ஒட்டு மொத்தக் கோர்வையாய் பல யுகங்கள் கடந்து வாழும், ஒப்பிலாத உணர்வு காதல். காதல் நமது ஆதி உணர்வு; நாகரிக மாற்றத்தை எதிர்த்து நம்மிடையே எஞ்சியிருக்கும் மரபுகளில் ஒன்று.

"இம்மை மாறி மறுமையாகினும்
நீயாகி யரெம் கணவனை
யானாகியர்நின் நெஞ்சுநேர் பவளே"

"யாயும் ஞாயும்  யாரா கியரோ
எந்தையும்  நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும்  எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே"

காதல் வாழ்வியலை காலம் கடந்தும் உலகம் அறிய வைக்கும் குறுந்தொகைப் பாடல்கள் இவை.

காதல், உயிர்கள் யாவற்றுக்கும் பொதுவானது. காக்கை குருவியிடமும் காதல் உண்டு... இதில் அன்றில் பறவையின் காதலும் கற்புநெறியும் போற்றுதலுக்குரியது... ஒன்றை விட்டுப் மற்றொன்று பிரியாது அப்படி பிரிய நேர்ந்தால் தன் உயிரை மாய்த்துக்கொள்ளும்.

காதல், காலம் காலமாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கும் ஏதேதோ வழிகளில். கதைகளிலும், காவியங்களிலும், திரைகளிலும் காதலை அங்கீகரிக்கும் இந்த சமூகம் நிஜ வாழ்க்கையில் மட்டும் இன்னும் காதலை அங்கீகரிக்கவில்லை!!!

“காதல்” என்ற சொல் உலகம் முழுவதும் ஆளுகிறது, யுகங்கள் யுகங்களாக... இந்த ஒற்றை வார்த்தையின் பின் இருக்கும் ஈர்ப்பு வேறு எந்த வார்த்தைக்கும் இல்லை.

காதலின் பரிமாணங்களே நம் வாழ்வின் சொந்தங்கள். காதல் இன்றி வாழ்க்கையில்லை!!! ஆதலினால் காதல் செய்வீர்!!!

– உங்கள் தோழி இளவரசி



## MAMMAS PAGE


05 Parenting tips
06 மெய்ப்பொருள்
07 Mom vs kids


## PREGGERS GUIDE


கர்ப்பிணிப் பெண்ணும்... தாமரை தண்டும்.... 08



FASHION TODAY 10







11 KIDS CORNER
13 CRAFTS GALLERY


## HEALTH TIDBITS


பலாப்பழத்தின் பயன்கள் 14
Health Benefits of Sprouts 15
Granny Remedies 16
ரத்த உற்பத்திக்கு உதவும் அற்புதக் கனி 16






## காதல் சிறப்பு பக்கங்கள்


18 காதல்...
21 Valentines Day Gift Ideas
22 A Day to celebrate love and affection


## இனி ஒரு விதி செய்வோம்...


ஆண் என்ன? பெண் என்ன? 23




## SPIRITUAL PAGES


மகா சிவராத்திரி 27

மாசி மகம் 29

Spiritual Notebook 31






## JUST RELAX


32 Movie Review

34 Jokes


## தமிழும்! அழகும்!!!


வள்ளுவன் பக்கம் 35

நீயா? நானா? 36







## COOKING


38 Breakfast Recipes

43 Tips... Tips...

44 Penmai's Kitchen Queen


## கதை பகுதி...


சிறுகதை 48

கனவே கலையாதே 50

CONTESTS & REWARDS 59





*The Penmai's Team*

**Administrator** (நிர்வாகி) - **E. Ilavarasi Johnson**

**Super Moderator** (தலைமை வழிகாட்டி) - **K. Parasakthi & Sumathi Srinivasan.**

**Moderators** (வழிகாட்டிகள்) - **Adhidhi, Angu Aparna@Aparna, Deepa Bala, JV_66@Jayanthy, Lali@Lalitha, Nishahameetha, N.Lakshmi, Rudhraa, Silentsounds@Guna and Surya.**

*Designing: Karthikeyan & Ilavarasi*

*Shared contents.*

*For Advertisement Please contact, support@penmai.com or call us at 8344143220*

*Write us your feedback to admin@penmai.com*

*Articles published here belongs to the users of Penmai, if you want to either comment or share your views, please click the article title, you will lead to the forums page, there you can pen down your views.*

# Parenting Tips

... jv_66@Jayanthi

## நல்ல தொடுதல், மோசமான தொடுதல்களை அறிவுறுத்தல் (Teach about Good Touch & Bad Touch):

நம் குழந்தைகளுக்கு அவர்கள் ஆணாக இருப்பினும், பெண்ணாக இருப்பினும், அவர்களது 3 வயது முதலே, good touch & bad touch முதலியவற்றைச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்து விட வேண்டும்.

இது ஏதோ பெண் குழந்தைகளுக்கு மட்டும்தான் என்ற எண்ணம் நிறைய பெற்றோருக்கு இருக்கலாம். ஆனால், இந்தக் காலத்தில், இருபாலர்க்கும் இது பொருந்தும்.

அவர்களுக்குத் தங்களின் மார்புப்பகுதி, கால்களுக்கு இடையில் மற்றும் பின்புறம், இவற்றை அவர்களின் அம்மாவைத் தவிர வேறு யாரும் தொடக் கூடாது என்றும், மருத்துவர் கூட, அம்மாவின் முன்னிலையில்தான் சோதனை செய்யலாம் என்றும், வேறு யாராவது தொட நேர்ந்தால், எப்படித் தடுக்க வேண்டும் என்றும், மற்றவர்களின் கவனத்தைக் கவர்ந்து, அந்தச் செயலைத் தடுக்க வேண்டும் என்றும் சொல்லித் தர வேண்டும்.

3 வயதிலிருந்து பெண் குழந்தைகளை, அவர்களின் அன்னை மட்டுமே குளிக்க வைக்க வேண்டும். தந்தை குளிக்க வைக்க நேர்ந்தால், அந்தரங்கப் பகுதிகளை, அக்குழந்தையையே சுத்தம் செய்யுமாறு கூறலாம்.

3 வயதிலிருந்து 2 அல்லது 3 மாதங்களுக்கு ஒரு முறை என்று இவ்விஷயத்தை நினைவுப் படுத்திக் கொண்டிருக்கலாம். இதை 7 வயது வரை அடிக்கடிச் சொல்லிக் கொண்டிருக்கலாம். பிறகு, அவர்களுக்கே பழகி விடும்.




அப்படி ஏதாவது நேர்ந்தால், யாராக இருந்தாலும், தன்னிடம் வந்து சொல்லும்படி தாய் வலியுறுத்த வேண்டும்.

# A Parenting Checklist

...Rameshshan@RameshShanmugam
Article published by WHO

## BY THE AGE OF 3 YEARS



**A child should be able to:**

- Walk, run, climb, kick and jump easily
- Recognize and identify common objects & pictures by pointing
- Make sentences of two or three words
- Say her or his own name and age
- Name colours
- Understand numbers
- Use make-believe objects in play
- Feed herself or himself
- Express affection.

**Advice for parents and other caregivers:**

- Read and look at books with the child and talk about the pictures
- Tell the child stories and teach rhymes and songs
- Give the child her or his own bowl or plate of food
- Continue to encourage the child to eat, giving the child as much time as she or he needs
- Help the child learn to dress, use the toilet or latrine and wash her or his hands with soap and water or a substitute, such as ash and water, after defecating and before touching food and eating
- Listen to and answer all the child's questions
- Encourage creative play, building and drawing
- Give the child simple tasks, such as putting toys back in their place, to build responsibility
- Limit television watching and ensure that violent shows are not viewed
- Acknowledge and encourage positive behaviour and set clear limits
- Provide consistent affection every day
- If available, enrol the child in an early learning (play) activity with other children.

**Warning signs to watch for:**

- Loss of interest in playing
- Frequent falling
- Difficulty manipulating small objects
- Failure to understand simple messages
- Inability to speak using several words
- Little or no interest in food.

# MOMS vs KIDS



**Q) How to make my kid to eat veggies and keerai?**

My daughter is not eating veggies and keerai. I have tried lot of tantrums, but failed. Help me friends.

***Deepa Bala***

If he/she is too young to try new dishes, simply mash the keerais and veggies and add it to their food. I did it for my kid since she too refuses to take in whatever way I give her. After 3 or 4 years, you have the liberty to try many new dishes.

- Try giving raw carrot and raw cabbage, sometimes they like it!
- Prepare fried rice or noodles or soups with all veggies. Because generally kids love colorful dishes.
- You can also try veg lollipop. I have tried and my kid liked it!
- Take some carrots, beans, beetroot, potatoes, cauliflower and peas and boil them. Drain out the water and mash the boiled vegetable in a bowl. Mix some crumbled bread in the mixture. Add some green chilies and salt to taste. Make oval shaped balls out of the mixture and insert them in the centre of the ball you have made. Once you have inserted the stick deep fry them.
- If you do not want to deep fry them, you can flatten these balls a little and make different shapes like star, heart, moon etc and grill them in your oven or microwave at 250 degrees for around 10 minutes.

***Gayathri Arun***

If your child does not like to eat veggies and greens include it in the non-veg dish like palak chicken.

- Vegetables can be cooked in different ways to tempt your child. Make chats using vegetables in different colors.
- Use your creativity and include veggies in lunch.
- Tell your child that he will be more stronger if he eats veggies.
- If your child likes pasta you can include lots of vegetables and send it for lunch. You can add veggies in noodles also.
- Vegetable roll in chapati or parotta is also a good idea.
- Introduce the "one bite rule". The vegetable that your child simply avoids by saying he won't like must be tried so tell your child to have a full mouthful of food, chew it slowly and then swallow so that she will get used to that particular food.

Appreciate your child when she has vegetables.



# கர்ப்பிணிப் பெண்ணும்... தாமரை தண்டும்....

...poovizhi

புள்ளதாச்சிப் பொண்ணும்மா... பார்த்து நல்லா சாப்பிடு என்ற வார்த்தையைக் கேட்காமல் இருப்போர் இல்லை. பெண் இனத்தின் பெருமைக்கும் அதிகபட்ச அக்கறைக்கும் உரிய காலம் மகப்பேறு காலமும், பாலூட்டும் காலமும் தான். இந்தக் காலத்தில் உணவில் அதிக கவனம் தேவை.



கருத்தரிக்க முடிவு செய்த உடனேயே பெண்ணுக்கு போலிக் ஆசிட் அவசியம் என்கிறது இன்றைய அறிவியல். அதாவது கருத்தரிப்பு நிகழ்வதற்கு முன்பிருந்தே போலிக் ஆசிட் (folic acid) எடுத்திருக்கவேண்டும். அப்போதுதான் பிறக்கும் குழந்தை நலமாக இருக்கும்.

இன்றைய அறிவியலின் இந்தக் கூற்றைத்தான் 'பரராசசேகரம்' என்னும் சித்த மருத்துவ நூல் கர்ப்பிணி பெண்கள் தாமரைப் பூவின் காயையும் தண்டுப் பகுதியையும் பாலில் சாப்பிட வேண்டும் என்கிறது. தாமரைத் தண்டில் போலிக் ஆசிட் நிறைந்துள்ளது என்பது இன்றைய தாவரவியல் செய்தி.

கரு உருவான பெண்கள் தினசரி உணவில் கீரை, பாசிப்பயிறு, பசுநெய், பசும்பால் சேர்த்துக் கொள்வது நல்லது. பசும்பாலில் பீட்டா கரோட்டீன்கள் அதிகம் உள்ளன. இது கர்ப்பிணிகளுக்கு மிகவும் தேவை.

முதல் மூன்று மாதம் வாந்தியை ஏற்படுத்தும் காலம். இந்த சமயத்தில் வயிற்றுப்போக்கு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தொடர்ந்து பழச்சாறுகள் எடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக மாதுளைச்சாறு வாந்தியை நீக்கிட உதவும் மற்றும் இரும்புச்சத்து நிறைந்ததும் கூட. இந்தக் காலத்தில் தவிர்க்க வேண்டிய உணவுகள் கத்திரிக்காய், மக்காசோளம், முள் இருக்கும் கடல் மீன்கள்.



**கவனிக்க வேண்டிய விஷயம்:**
கர்ப்பிணிப் பெண்ணின் பெற்றோரில் எவருக்கேனும் நீரிழிவு (Gestational Diabetes) நோயிருப்பின் அந்த பெண்ணிற்கும் அந்நோய் ஏற்படக்கூடும். அதைத் தவிர்க்க லோக்களைசமிக் (Low Glycemic) தன்மையுடைய உணவுகளை அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டும். அவற்றுள் சில; நார் பொருள் நிறைந்த கீரை, வெந்தயம், புழுங்கல் கைக்குத்தல் அரிசி, கேழ்வரகு போன்றவை.

நான்காம் மாதம் முதல், மகவு வளர துவங்கும். மலச்சிக்கல், காலில் சுரப்பு ஏற்படாமல் இருக்க பார்லி கஞ்சி, முள்ளங்கி, வெள்ளரி, வாழைத்தண்டு போன்ற பச்சடிகளை சாப்பிட்டு வரவேண்டும். இந்தக்காலக் கட்டத்தில் பசலைக்கீரை, தண்டுக்கீரை பாசிப் பயிறுடன் சாப்பிட்டு வர வேண்டும். காய்ந்த திராட்சை, குல்கந்து தினசரி சாப்பிட்டு வர வேண்டும்.

தவிர்க்க வேண்டிய உணவுகள்: எண்ணெயில் பொரித்த உணவுகள்.

**பிரசவத்திற்கு பின்:**
முதல் ஒரு வாரத்திற்கு அதிக புளி, காரம், எண்ணெயில் பொரித்த உணவு ஆகிவற்றைத் தவிர்க்க வேண்டும்.

துவர்ப்புமிக்க உணவுகளையும் முதல் ஏழு நாட்கள் தவிர்க்க வேண்டும்.

பிறகு சத்து மிகுந்த உணவுகளை படிப்படியாக எடுத்துக் கொண்டால் தாய்க்கும், குழந்தைக்கும் நலம்.



# Trendy Sarees Collection

...smahi@Maheswari













# PENMAI KIDS CORNER

## *Homemade Finger Paints*



**Deepa bala**

**Things needed**

- 2 tb sp cornflour
- 6 tb sp water
- ½ cup of boiling water
- Food colours

**Method to make homemade finger paints**

- Put the water to boil.
- Mix the cornflour & water. Add this to the boiling water.
- Stir over medium heat till it thickens.
- Remove from fire and spoon out portion into small bowls.
- Add food colours to make 4-5 shades of finger paint. Leave to cool.

Use these finger paints to have loads of fun with your child

## *Slokas for Kids*



**Vakrathunda Sloka**

Vakrathunda Mahaakaaya Suryakoti
Samaprabha Nirvignam kurumey deva
Sarvakaryeshu Sarvada

**Meaning**

O Elephant headed large bodied Lord, radiant as a thousand Suns, I ask for your grace so that this task that I am starting may complete without any hindrances.

# Kids Corner



Sumathisrini's son Aparajithan




Vignesh, Orphanage Boy's Drawing
Shared by Divyakala

# Crafts Gallery

Rangoli Drawing




...Naliniselva

Wooden Rangoli



...Vijikrishnan

Paper Quilling




...Sangichandru

Digital Painting




...Sujibenzic@Sujana

# பலாப்பழத்தின் பயன்கள்

...Silentsounds@Guna

மா, பலா, வாழை என முக்கனிகளில் ஒன்று என்ற சிறப்பைக் கொண்ட பலாப்பழத்தில் பல்வேறு நன்மைகள் உள்ளன. முக்கனிகளில் இரண்டாவதாகக் கருதப்படும் பலாவின் சுவைக்கு ஈடு இணையில்லை. பலாப்பழத்தின் மேல்தோல் கரடுமுரடாக இருந்தாலும், அதன் உட்பகுதியில் இருக்கும் பழம் சுவையாகவும் கண்ணைக் கவரும் நிறத்திலும் காணப்படும். இந்தப் பலாப்பழம் ஊட்டச்சத்து மிக்கது, மருத்துவ குணம் கொண்டது.



நார்ச்சத்து அதிகமுள்ள பலாப்பழம் செரிமானத்துக்கு நல்லது. வைட்டமின் ஏ, பி, சி, கால்சியம் உள்ளிட்ட சத்துக்கள் நிறைந்த இப்பழம் முதுமையைத் தடுக்க வல்லது. கார்போஹைட்ரேட், பொட்டாசியம், கால்சியம் சத்து, புரதச்சத்து ஆகிய சத்துக்கள் உள்ள இந்த பலாப்பழம், புற்றுநோய் வராமல் தடுக்கும்.

பொட்டாசியம் அதிகம் இருப்பதால், இரத்த அழுத்தத்தை குறைத்து இதய நோய் வராமல் தடுகிறது. பலாப்பழத்தில் இரும்புச்சத்து இருப்பதால் அனிமியா வராமல் தடுப்பதோடு, உடலில் இரத்த ஓட்டத்தைச் சீராக்குகிறது. வயது முதிர்தலைத் தள்ளிப் போட பலாப்பழம் உதவுகிறது. இது வயது ஆவதால் ஏற்படும் தோல் சுருக்கத்தைத் தடுக்கிறது. மலச்சிக்கலை நீக்கப் பலாப்பழம் உதவுகிறது.

அல்சரைக் குணமாக்கும் தன்மை கொண்டது. ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும். காய்ச்சலை குணமாக்கும். நோய் எதிர்ப்பு சக்தி உள்ளிட்ட ஏராளமான நன்மைகள் மற்றும் சுவை கொண்ட பலாப்பழத்தை நாமும் சாப்பிட்டு பயன்பெறுவோம். பலாப்பழம் மட்டுமல்லாமல் பலாப்பழத்தில் உள்ள விதையும் பல்வேறு நன்மைகளைக் கொண்டது.

**Nutritional Value of Jackfruit (For 100 gms)**

| | | | |
|---|---|---|---|
| **Nutrients** | | **Electrolytes** | |
| Energy | 95 Kcal | Sodium | 3 mg |
| Carbohydrates | 23.5 g | Potassium | 303 mg |
| Protein | 1.72 g | | |
| Total Fat | 0.64 g | **Minerals** | |
| Cholesterol | 0 mg | Calcium | 34 mg |
| Dietary Fiber | 1.5 g | Iron | 0.60 mg |
| | | Magnesium | 37 mg |
| **Vitamins** | | Manganese | 0.197 mg |
| Folates | 24 µg | Phosphorus | 21 mg |
| Niacin | 0.920 mg | Selenium | 0.6 mg |
| Pyridoxine | 0.329 mg | Zinc | 0.42 mg |
| Riboflavin | 0.055 mg | | |
| Thiamin | 0.105 mg | **Phyto-nutrients** | |
| Vitamin A | 110 IU | Carotene-ß | 61 µg |
| Vitamin C | 13.7 mg | Crypto-xanthin-ß | 5 µg |
| Vitamin E | 0.34 mg | Lutein-zeaxanthin | 157 µg |

...Angu Aparna

Health Tidbits

# Health Benefits of SPROUTS

...Gkarti @ Karthiga

Sprouts - Sprouting is the process whereby seeds are germinated and eaten either raw or cooked. Sprouts like radish, alfalfa (Kollu), soybean, lentils and broccoli are excellent sources of protein and a wide range of different nutrients that can help in maintaining good health.

Experts said that there can be 100 times more enzymes in sprouts than uncooked fruits and vegetables. Enzymes are special types of proteins which can keep our bodies healthy and fit.

Sprouts contain include Vitamin A, Vitamin C, Vitamin B1, Vitamin B6, and Vitamin K. 4. Vitamin content increases dramatically. This is especially true of vitamins A, B -complex, C and E.

The vitamin content of some seeds, grains, beans, or nuts increases by up to 20 times the original value within only a few days of sprouting. Research shows that during the sprouting process mung bean sprouts increase in vitamin B1 by up to 285 percent, vitamin B2 by up to 515 percent and niacin by up to 256 percent.

Apart from this, it is also rich in minerals such as Iron, Phosphorous, Magnesium, Potassium, Manganese and Calcium.

Eating sprouts can be very helpful for people with digestive or bloating problems. They are also perfect for younger kids and elderly people.



Since sprouts are also high in fiber and low in calorie, it can contribute positively to any weight loss diet plan. Eating sprouts will let you enjoy nutrients without the extra calories. It will also make you feel fuller and stave off hunger longer. If you are looking for a way to lose weight, include sprouts in your diet.

Sprouts are alkalizing to your body. Many illnesses including cancer have been linked to excess acidity in the body.

# Granny Remedies



## மாதவிடாய் சம்மந்தமான பிரச்சினைகளுக்கு

**Parasakthi**
வாழைப்பூவை பொடியாக வெட்டி அதனுடன் இஞ்சி, வெள்ளைப் பூண்டு, மிளகு, சீரகம், சோம்பு, கொத்தமல்லி விதை, கறிவேப்பிலை ஆகியவற்றை இடித்துப் போட்டு தண்ணீர் விட்டு காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவேண்டும். இதனை காலை, மாலை என இருவேளை குடித்து வந்தால் மாதவிடாய் சம்மந்தமான பிரச்சினைகள் குறையும்.

**Blackmoon@Latha**
சாதம் வடித்த நீர், தயிர், இரண்டையும் சம அளவு எடுத்து கலந்து குடித்தால், மாதவிடாய் சமயத்தில் வரும் வலி குறையும்.

## ரத்த உற்பத்திக்கு உதவும் அற்புதக் கனி Sriramajayam

மாதுளையில் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு ஆகிய மூன்று ரகங்கள் உள்ளன. இனிப்பு மாதுளம் பழத்தைச் சாப்பிட்டால் இதயத்திற்கும், மூளைக்கும் மிகுதியான சக்தி கிடைக்கிறது. பித்தத்தைப் போக்குகிறது. இருமலை நிறுத்துகிறது.

புளிப்பு மாதுளையைப் பயன்படுத்தினால் வயிற்றுக் கடுப்பு நீங்குகிறது. ரத்த பேதிக்குச் சிறந்த மருந்தாகிறது. தடைப்பட்ட சிறுநீரை வெளியேற்றுகிறது. பித்த நோய்களை நிவர்த்தி செய்கிறது. குடற்புண்களை ஆற்றுகிறது. எந்த வகையான குடல் புண்ணையும் குணமாக்குகிறது.



மாதுளம் விதைகளைச் சாப்பிட்டால் ரத்தவிருத்தி ஏற்படும். சீதபேதிக்குச் சிறந்த நிவாரணம் அளிக்கும். தொண்டை, மார்பு, நுரையீரல், குடலுக்கு அதிகமான வலிமையை உண்டாக்குகிறது.

ஆண் தன்மையில் பலவீனம் உள்ளவர்கள் மாதுளம்பழம் சாப்பிடுவதால் மிகுந்த சக்தியைப் பெறலாம். மாதுளம்பழத்தைச் சாப்பிட்டால் விக்கல் உடனே நிற்கும். அதிக தாகத்தைப் போக்கும்.



# காதல்
## சிறப்பு பக்கங்கள்

உணர்வு பிழம்புகளின் ஒட்டு மொத்த கோர்வையாய்
பல யுகங்கள் கடந்து வாழும், ஒப்பிலாத உணர்வு காதல்!
காதல், நமது ஆதி உணர்வு. நாகரீக மாற்றத்தை எதிர்த்து
நம்மிடையே எஞ்சியிருக்கும் மரபுகளில் ஒன்று.
காதல் என்ற சொல் உலகம் முழுவதும் ஆளுகிறது.
இந்த ஒற்றை வார்த்தையின் பின் இருக்கும்
ஈர்ப்பு வேறு எந்த வார்த்தைக்கும் இல்லை.
காதல் பற்றி பெண்மை நண்பர்களின் சில சிறந்த கருத்துக்கள்...
அடுத்து வரும் பக்கங்களில்...

# காதல்!!! சிறப்பு பக்கங்கள்...





**anitha.sankar**

நம்மையே மறக்க செய்து நமக்குள் ஒளிந்து கொண்டு
கண்ணாமூச்சி ஆடும் அற்புதமான உணர்வு.....

உணரும்பொழுது மத்தாப்பூ சிதறல்களாய் மனம் முழுதும்
உற்சாகம் தெறிக்கச் செய்யும் இனிய உணர்வு...



காதல்....
பிடிவாதத்தை ஜெயிக்கும்...
நம்மையே ரசிக்க செய்யும்...
சிறகின்றி பறக்க செய்யும்...
கைகள் கோர்க்கும் முன்,
மனங்கள் கோர்த்து நிற்கும்...
சேர்ந்திருக்கும் போது உலகையே வென்ற களிப்பை தரும்;
பிரிந்திருக்கும் போது உலகோடு நம்மையே வெறுக்க
செய்யும்; உணர்வே காதல்...
காதலே வேண்டாம் என தப்பி ஓட நினைப்பவரையும்,
வசப்படுத்தி அடிமையாக்கும்...
காதல் இல்லாத வாழ்க்கை மிகவும் வெறுமையானது...
சேர்ந்திருக்கும் காதலர்களை விட
பிரிந்திருக்கும் காதலர்களால் நிச்சயமாய் உணர முடியும்
அது தரும் வலியை....

**Butterfly04**

காதலர்கள் தினம் என்பது காதல்
செய்பவர்களுக்கு மட்டும் என்றில்லை..

இது அன்பின் தினம்.. யாரெல்லாம் அன்பு
செய்கின்றாகளோ, அவர்கள் அனைவரும்
கொண்டாடவேண்டிய தினம்..

ரௌத்திரம் பழகு என்று கூறிய பாரதி
கூட காதல் செய்வீர் என்றும்
ஆணையிட்டான்...



# காதல்!!!
## சிறப்பு பக்கங்கள்...





**Parasakthi**

இரு மனங்களுக்கு இடையேயான
வரையறுக்கப்பட முடியாத உணர்வு காதல்

ஈருடல் ஓருயிராய் இரு இதயங்கள் நீக்கமற
கலந்து, அன்பை பிரதானமாக சுவாசித்து
உனக்காக நான், எனக்காக நீ! என
கருத்தொருமித்து காலம் முழுதும் தொடரும்
பந்தம் காதல்!

நிறைகளை ஏற்று, குறைகளை மறந்து தன்
துணையை அப்படியே ஏற்றுக்கொள்வது காதல்!!

தன் துணைக்காக தனக்கு பிடித்ததை விட்டு
கொடுத்து பிடிக்காததை ஏற்றுக்கொள்ளும் மன
முதிர்ச்சியே காதல்!!!!



**Silentsounds**

காதலுக்கு கண்ணில்லை என்பது பொய்
காதல் வித்தை தூவுவது கண் என்பது தான் மெய்
காதலில் கண் நாவாகி பேசுவது உண்மை!
அது காதலுக்கே உரிய தன்மை.

ஜென்மத்தின் ஜனனங்கள்
காதலின்றி ஏது? இவ்வுலகில்!
உயிரின் உய்வுக்கும்
உயிர்ப்பிற்கும் வித்தாகும் காதல்...

மானுடத்தின் மகத்துவமும்
வாழ்க்கையில் சமத்துவமும்
காதல்..காதல்..காதல்..




**Yams@Yamini**



காதல்!
உணர்வுகள் எல்லாம் இறந்து கிடப்பதாய் நினைத்திருக்க அதை
உயிர்ப்பிக்கும் ஓர் அழகிய தூண்டுகோல்!
உன்னை நீ மட்டும் தான் அதிகமாய் தெரிந்திருப்பதாய் கர்வத்தில்
இருக்க அதை பொய்யாக்கும் ஓர் நிஜம் காதல்!
உனக்காய் வாழாமல் இன்னொருவருக்காகவே நீ
பிறப்பெடுத்ததாய் நினைக்க வைக்கும் ஓர் அதிசயம் காதல்!
அம்மா மடியை மறந்து உன் இணையின் மடிக்காக ஏங்க
வைக்கும் அன்பாய் காதல்!
இரு உடல்களில் ஓர் உயிராய் வாழ செய்யும் ஓர் அதிசயம்
காதல்! மரணத்தால் ஓர் உயிர் பிரிய அதன் இணையான
உன்னையும் சேர்த்து கொன்று விடும் ஓர் கொடுமையான
அரக்கனாய் மாறுமே உண்மை காதல்!





# "உலகத்தின் ஆதி உண்மை பொய்" காதல்

**Surya**

உலகம் சொன்ன முதல் உண்மையும், பொய்யும் -
இந்த காதல்!!!

ஒலி கூட்டங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து மொழியும்,
இலக்கணமும் படைப்பதற்கு முன்னால் விழிக்கூட்டங்கள்
ஒன்று சேர்ந்து எழுதிப் படைத்த காவியம் காதல்!!!

கடவுளின் கூடாரத்தில் கிசுகிசுத்த ரகசியங்கள் பிரபஞ்ச
வெளியில் கசிந்தபோது அது காதல் எனப்பட்டது.
ஆம் கடவுள் காதலித்தான், காதல் மொழி பேசினான்.

மனிதனை படைப்பதற்கு முன்னால் அவன் முழு நேர
தொழிலே காதல்!!!

அந்த பெருந் தெய்வங்களும், குட்டி தேவதைகளும்
காதலால் பேசினார்கள்
காதலைப் பேசினார்கள்
காதலில் பேசினார்கள்!!!

பல யுகப் புரட்சிகளை உருவாக்கியது காதல்.
பல தேசங்களின் எல்லைக் கோடுகளை நகர்த்தியது காதல்
காதல் சித்தாந்தங்களை உருவாக்கியது
பல தத்துவங்களை பெற்றெடுத்தது காதல்.

ஆறறிவின் அரைகுறையை உணர்த்துவது காதல், ஏழாம்
அறிவின் எல்லைக் கோடு காதல்!!!

காதல் எதையும் வேற்றுமை படுத்துவதில்லை, சில
நேரங்களில் அவை உணர்வுகளின் ஒற்றுமையில்
சேர்கிறது!!! ஆகவே காதல் செய்வீர்!!!










## gkarti@Karthiga

- Gifts for Men - Watches, Perfumes, Handmade gifts, Shirts,
- Gifts for Women - Red Roses, Teddies, Some Heart Shaped accessories, Diamond Ring Key Chains, Love you Cafe Mugs, CD's with good collections of lovable songs, A Photo frame(Pic of you and your fiance), Cute box - fill it with his favorite candies.
- Write a letter for him or her- Its a nice way to show how you feel

## Gayathri

- Latest MP5 player with the choice of both of your favourite songs.
- Gold ring with both of your initials.
- Whatever gift you give him, include a greeting card or letter with your own message from your heart without being much poetic or dramatic but in a simpler way you usually communicate with him, expressing the depth of your love in your own style of writing.

## Parasakthi



- For Men - Wallets, Latest Model mobile phones, Ipods
- For Women - Trendy handbags, pouches, Cute & lovely greeting Cards, Rings, Chains and bracelets, A locket with a photo slot, Perfume and Flowers

## vijigermany

- Musical Love Card
- Diamonds or other beautiful jewellery
- A String of Love Notes
- Interesting Gadgets
- A card with 101 reasons ‘why I love you so much’
- Album with pictures of his achievements and childhood memories

## Sriramajayam

- Greeting card
- Teddy bear
- Apparels
- Leather gifts
- Handmade gift articles
- Photo frames or photo gifts
- Jewelry
- Heart shape gifts
- Mobile
- Ipad
- Love birds





Valentine's Day

# A day to celebrate love and Affection

...nlakshmi



Valentine's Day... Well I came to know about this day when I was a teenager. We were told that Valentine's Day is the day to celebrate Love a.k.a Lover's day or "Kadalar Dinam". There were many stories like guys should wear a particular color if he din't have a Gird Friend and Girls should wear a particular color for the same and even there were visuals in local news of how other countries celebrate valentine's day which only include the "Kissing race".

Even now I heard nothing have changed in our country. There were protests for celebrating valentine's day and even could see some bad behaviour on "the real Lovers" who were celebrating the Valentine's Day.

I was also under the same impression that only Lover's celebrate Valentine's Day, until I came to States. Of course, Lovers are everywhere, even here who celebrates valentine's day but I also see a kid giving valentine day wishes to teachers, friends, mom and dad, a husband celebrating valentine's day with his wife and vice versa. Grandparents wishing their grand kids and presenting with gifts, friends exchanging cards, sisters and brothers exchanging gifts and celebrating the day.

So It's not just the day, where the opposite sex of same age group who have mutual interest celebrate, it's a celebration of love and affection on mankind.

Well, everyone can think why a special day to appreciate love, appreciate dad and mom.

My answer is Why not?

We have a day "Diwali/Halloween". Which is to celebrate a victory over bad/evil?

We have a day "Pongal/Thanksgiving" which is to appreciate and thank everyone and everything which led us where we are now.
Why not valentine's day which is a pure celebration of love and affection which drives every living things be it humans or animals.

## இனி ஒரு விதி செய்வோம்...



# ஆண் என்ன? பெண் என்ன?

...Geetha A@Anu

என்னைப் பாதித்த இரண்டு விஷயங்களுக் காக நான் இந்தக் கட்டுரையை எழுதுகிறேன். நான் என்னைச் சுற்றி நடந்த, நடந்து கொண்டிருக்கும் விஷயங்களை இங்கே உங்களுடன் பகிர்கிறேன். நிச்சயம் நீங்களும் கடந்து வந்திருப்பீர்கள்.

சமீபத்தில் பெண்மை வாசகி ஒருவர் தான் கருவுற்றிருப்பதாகவும், தன் கணவன் மற்றும் அவரைச் சார்ந்தவர்கள் ஆண் குழந்தை மட்டுமே வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் எப்படி புரிய வைப்பது, இது என் கையில் இல்லை என்று?




இதைப் படித்ததும் ஒரு புறம் இவரைப் போல பாதிக்கப்பட்டிருக்கும் சகோதரிகளை எண்ணி அழுவதா? அல்லது இன்னும் நாம் எந்த நூற்றாண்டில் இருக்கிறோம் என்று தெரியாமல் இருக்கும் இந்த கோமாளிகளை எண்ணிச் சிரிப்பதா? என்று தெரிய வில்லை. இதை நான் சாதாரணமாக பார்க்க வில்லை. ஒரு முறை நான் என்னுடைய ஊர் செல்வதற்காக பேருந்திற்காகக் காத்துக் கொண்டிருந்தபோது, எங்களுடைய ஊரைச் சேர்ந்த பெண்ணைப் பார்த்தேன். என்னை விடச் சின்னப்பெண். மூன்று பெண் குழந்தைகளை வைத்திருந்தாள். வயிற்றிலும் சுமை. எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. 'என்னம்மா இது?' என்று நான் கேட்க, 'என்னக்கா பன்றது? மூனும் பொண்ணா போயிடிச்சி. அடுத்ததாவது பையனா இருக்காதா?' என்றாள். எனக்கு மயக்கமே வரும் போல் இருந்தது. அடுத்ததும் பெண்ணாக

# ஆண் என்ன? பெண் என்ன?

போய் விட்டால் என்றேன். வெட்கச் சிரிப்புடன், திருப்பி முயற்சி பண்ண வேண்டியதுதான் என்றாளே பார்க்கலாம்!!! அப்புறம் ரகசியக் குரலில் 'பையன பெக்கலன்னா யாரும் மதிக்கவே மாட்டேங்கறாங்க அக்கா' என்றாள். எங்கே போய் முட்டிக் கொள்வது? எங்கே ஆரம்பிக்கிறது தவறு? ஒரு சமுதாயம் மதிப்பதற்காகவா ஒரு ஆண் பிள்ளையை பெற்றுக் கொள்கிறார்கள்? மதிப்பது என்றால் எந்த விதத்தில்? இப்படி ஆயிரமாயிரம் கேள்விகள்.

இதற்கு அடிப்படைக் காரணமாக நான் பார்ப்பது அறியாமையைத்தான். கிராமங்களில் இன்னும் பெண்களுக்கு முழுமையாகக் கல்வி அறிவு இல்லை. அப்படியே இருந்தாலும், சுற்றி இருப்பவர்களுக்கும், கணவனுக்கும் கட்டுப்பட்டுக் கிடக்கிறாள்.

இப்படி இவர்கள் பெற்றெடுக்கும் ஆண் பிள்ளைகளைத் தலை மேல் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார்கள். எதற்கெடுத்தாலும் 'அவன் ஆண் பிள்ளை அவன் வழிக்கு நீ ஏன் போற?' என்று பெண்ணைத் தாழ்த்தியும், ஆணை உயர்த்தியும் பேச ஆரம்பிக்கிறார்கள். இங்கே இருந்து ஆரம்பிக்கிறது ஆண் என்ற தலைக்கணம். நாம் என்ன செய்தாலும் தப்பில்லை என்ற எண்ணத்தைப் பெற்றோர்கள் அவர்களுக்கேத் தெரியாமல் ஏற்படுத்தி விடுகிறார்கள். இதனால் இவ பொம்பள என்ற ஒரு தாழ்வான எண்ணம் இயற்கையிலேயே ஏற்படுகிறது. பெண்கள் தனக்குக் கீழ் படிந்தவர்கள் என்ற ஆழமான எண்ணம் சிறு வயது முதல் உண்டாகிறது.

ஆனால் இதற்கு விதிவிலக்கான குடும்பங்களும் இருக்கத்தான் செய்கின்றன. இதை எல்லாம் தாண்டி, நிறைய திரைப்படங்களில் நான் பார்த்திருக்கிறேன். பொம்பளைன்னா ஒழுங்கா அடக்கமா இருக்கணும். எந்தத் தப்பையும் தட்டிக் கேட்க கூடாது. அப்புறம் ஒருவன் பயந்து விட்டால், உடனே 'பொம்பள மாதிரி



# இனி ஒரு விதி செய்வோம்...




போய் சேலையும், வளையலும் போட்டுக்கோ' என்று சொல்வது. பெண்கள் என்றால் ஆணுக்கு அடங்கியவள், கட்டுப்பட்டவள் என்ற எண்ணம் கொண்ட ஆணாதிக்க சமுதாயம். என் குலம் புலியை முறத்தால் அடித்து விரட்டிய மங்கையர் குலம். இந்தக் கைகள் சமைத்து போட மட்டுமல்ல, சமயத்தில் சரித்திரம் படைக்கவும் செய்யும். ஆண்குலம் புரிந்து கொள்ள வேண்டும். தொட்டிலை ஆட்டும் கை, தொல்லுலகம் ஆளும் கை என்பதை மறக்க வேண்டாம். தாய்மார்கள் இதை முதலில் புரிந்து கொண்டு பெண் குழந்தைகளை ஆண் குழந்தைகள் முன்பு மட்டம் தட்டிப் பேசுவதை நிறுத்துங்கள்.

சாத்தி ரங்கள் பலபல கற்பராம்;<br>
சவுரி யங்கள் பலபல செய்வராம்;<br>
மூத்த பொய்மைகள்<br>
யாவும் அழிப்பராம்;<br>
மூடக் கட்டுக்கள் யாவுந் தகர்ப்பராம்;<br>
காத்து மானிடர்<br>
செய்கை யனைத்தையும்<br>
கடவு ளர்க்கினி தாகச் சமைப்பராம்;<br>
ஏத்தி ஆண்மக்கள்<br>
போற்றிட வாழ்வராம்;<br>
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டிரோ;<br>
- பாட்டுச்சித்தன் பாரதி


"WHEN WILL DAUGHTERS BE CELEBRATED AND NOT ABORTED"???

எந்த விதத்தில் இவர்கள் உயர்ந்தவர்கள்? நீயும் பத்து மாதம், நானும் பத்து மாதம். உடல் அமைப்பு மற்றும் வலிமையைத் தவிர மற்றவை எல்லாவற்றிலும் நீயும் நானும் சமம். இதை ஒவ்வொரு தாயும் தன் குழந்தைக்குப் புரிய வையுங்கள்.

பெண்ணைக் கவர்ச்சிப் பொருளாக, கேவலமான கண்ணோட்டத்தோடு பார்க்காமல் அவளும் உன்னைப் போல் சதையும், இரத்தமும், உணர்ச்சிகளும் கொண்ட மனுஷி என்பதை உணர்த்துங்கள். உணராத ஆண்கள் இனிமேலாவது உணருங்கள்.

இதைப் போலவே சில குடும்பங்களில் ஆண் குழந்தை என்ன கேட்டாலும் வாங்கிக் கொடுப்பார்கள். பெண் குழந்தை எதைக் கேட்டாலும் தள்ளிப் போடுவார்கள். அதேபோல் பள்ளிகளில் கூட வித்தியாசம் இருக்கும். 'அவன் ஆம்பிள புள்ள... நாளப் பின்ன குடும்பத்தக் காப்பாத்துவான்... நீங்க அடுத்த வீட்டுக்குப் போய் ஆக்கிக் கொட்டப் போறவ, எதுக்கு உசந்தப் பள்ளிக்கூடம்'

# ஆண் என்ன? பெண் என்ன?




என்பார்கள். தன்னை மட்டுமல்ல, தன்னைச் சுற்றியுள்ள அனைத்தையும் காப்பாற்றும் தன்மை கொண்டவள் பெண். ஒரு பெண் கல்வி கற்றால் ஒரு வீடு சிறக்கும். ஒரு வீடு சிறந்தால் ஊர் சிறக்கும். ஒரு ஊர் சிறந்தால் ஒரு மாநிலம் சிறக்கும். ஒரு மாநிலம் சிறந்தால், என் நாடு சிறக்கும். தயவு செய்து கல்வியில் பாரபட்சம் பார்க்காதீர்கள். என் தோழிகள் அனைவரும் சிறந்த கல்வியாளர்களாகவும், சிறந்த நிர்வாகிகளாகவும் விளங்க வேண்டும். இனிமேல் வரும் சந்ததிகள் நிச்சயம் சமமான சகோதர, சகோதரி பாசத்தோடு இருக்க இப்பொழுதிருந்து பாடுபடுவோம். இது நம் கையில் தான் இருக்கிறது. நாம் நினைத்தால் நிச்சயம் ஏற்றத்தாழ்வுகளைக் களையலாம்.

எந்தக் குழந்தையாக இருந்தால் என்ன? நாம் அந்தக் குழந்தையைத் தாய்ப்பற்று, நாட்டுப்பற்று, உயிர்கள் அனைத்தின் மீதும் பற்று வைத்து அன்பே சிவம், அன்பே யேசு, அன்பே அல்லா என்று அதற்கு உணர்த்துவோம். வயதான காலத்தில் நம் வலியையும், வேதனையையும் புரிந்து கொண்டு நம்மைக் குழந்தையாக பாவித்து, நம்மிடம் அன்பு காட்டும் பண்பை நம்மிடமிருந்து ஊட்டுவோம். ஆண் குழந்தையோ, பெண் குழந்தையோ அதை ரசியுங்கள். முன்பிருந்த நிலை தற்பொழுது மாறி இருக்கிறது. அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் விகிதம் மிகக் குறைவு. சில இடங்களில் பெண் குழந்தையைக் கொன்று விடுகிறார்களாம். எழுதும் பொழுதே கண் கலங்குகின்றது. அவ்வளவு வேண்டாதவர்களா பெண்கள்? தாய்மார்களே பெண்களின் விகிதம் குறைந்து வருவதாக புள்ளி விவரங்கள் சொல்கின்றன. நாளை நீங்கள் உங்கள் பிள்ளைக்கே பெண் தேடும் போது சிரமப்படலாம்.

கிராமப்புறங்களில் நிச்சயம் விழிப்புணர்வை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி எடுத்தால் மட்டுமே குடும்பக்கட்டுப்பாடு, சிசுக்கொலை,மற்றும் பெண் கல்வி போன்ற பிரச்சினைகளை தீர்க்க முடியும்.

# உன்னைச் சரணடைந்தேன்...

## மகா சிவராத்திரி

...Sumathisrini



ஒவ்வொரு மாதமும் தேய்பிறை சதுர்த்தசி எந்த நாளில் வருகிறதோ, அது "சிவராத்திரி' இரவு ஆகும். இதை, 'மாத சிவராத்திரி' என்பர். மாசி மாதத்தில் தேய்பிறை காலத்தில் வரும் சதுர்த்தசி நாளையே நாம் மகா சிவராத்திரியாக சிறப்பிக்கிறோம்.

மகா சிவராத்திரியைப் பற்றி ஏராளமான கதைகள் புராணத்தில் உள்ளன. அவற்றை கேட்பதும், படிப்பதும் கூட புண்ணியம் தரும். பிரம்மோத்திர காண்டத்தில் கூறப்பட்டுள்ள ஒரு கதை இது.

சண்டன் என்று ஒரு வேடன் இருந்தான். அவன் ஒரு அப்பாவி. அவனுக்கு சண்டிகா என்ற மனைவி இருந்தாள். அவன் தொழில் காட்டில் வேட்டையாடுவது. காட்டில் அலையும் விலங்குகளையும், பறவைகளையும் வேட்டையாடிப் பிடித்து அவற்றை விற்று ஜீவனம் செய்து வந்தான். ஒரு நாள் அடர்ந்த காட்டிற்குள் விலங்குகளைத் தேடி அலைந்து கொண்டிருந்த போது, வானுயர்ந்த ஒரு பெரிய வில்வ மரத்தினடியில் அன்றலர்ந்த பூவாய், அழகிய சிவலிங்கம் ஒன்று புதியதாகத் தோன்றி இருப்பதைக் கண்டான். அது ஒரு சுயம்பு லிங்கம்.

சிவலிங்கத்தைக் கண்டதும் அவனுக்கு மெய்சிலிர்த்தது. அவனுள் அன்பும், பக்தியும் பெருகிக் கரைபுரண்டோடியது. தீயைக் கண்ட மெழுகு போல் மனமுருகினான். வைத்த கண் வாங்காமல் மெய் மறந்து சிவலிங்கத்தையேப் பார்த்துக் கொண்டிருந்தான். பார்க்க பார்க்க பரவசமானான். அவனையுமறியாமல் அவன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகி வழிந்தது. அவன் உள்ளம் பெறற்கரியப் பெருஞ்செல்வத்தைப் பெற்றது போல் குதூகலத்தால் குதித்து கூத்தாடியது. தன்னை மறந்தான், தன் நிலை மறந்தான்.

தானேத் தோன்றிய சிவலிங்கத்திற்கு பூஜை எப்படி செய்ய வேண்டும்? இறைவனை எப்படி வணங்க வேண்டும்? என்னென்ன உபசாரங்கள் செய்ய வேண்டும்? என்னவெல்லாம் படைக்க வேண்டும் என்ற விவரமெல்லாம் அவனுக்குத் தெரியாது. எதுவுமே தெரியாத ஒரு அப்பாவி வேடன் அவன். அப்போது அங்கே சிங்ககேது என்ற மன்னன் வந்தான். வேட்டையாட கானகம் வந்தவன், தன் பரிவாரங்களைப் பிரிந்து, வழி தெரியாமல் அலைந்து கொண்டிருந்தவன் வேடன் சண்டன் இருக்குமிடம் வர நேர்த்தது. கானகத்தை நன்கறிந்த வேடனைக் கண்ட மன்னனுக்கு மிகுந்த சந்தோஷமேற்பட்டது. வேடனைக் கொண்டு கானக வழியைக் கண்டுபிடித்து விடலாம் என நம்பினான்.

மன்னன் சிங்ககேது வந்ததைக் கூட அறியாமல் சிவலிங்கத்தையேப் பார்த்துக் கொண்டிருந்த சண்டனைப் பார்த்து "வேடா, இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? வழி தவறி வந்து விட்டேன், காட்டை விட்டு வெளியேற வேண்டும்... வழி காட்டு" என்று கேட்க, மன்னன் குரல் கேட்டு சண்டன் உணர்வு வரப்பெற்றான். "அரசே, என்னை மன்னியுங்கள், பாராமுகமாய் இருந்து விட்டேன். என்னுடன் வாருங்கள் வழிகாட்டுகிறேன்" என்றான். தொடர்ந்து, "மகாராஜா இங்கே இருக்கும் சிவலிங்கத்தை எப்படி பூஜிக்க வேண்டும் என்பதை எனக்கு விளக்கமாய் கூறுங்கள்" என்று மிகுந்த பணிவுடன் மன்னனிடம் கேட்டான் சண்டன். உடனே மன்னன் பரிகாசமாய் "வேடனே, உன் தோல் பையில் இருக்கும் தண்ணீரைக்

கொண்டு வந்து சிவலிங்கத்தின் மீது ஊற்று. சுடலையில் வெந்த சாம்பலைக் கொண்டு வந்து சிவலிங்கத்துக்குப் பூசு. கைக்கு கிடைக்கும் பூக்களையெல்லாம் கொண்டு வந்து சிவலிங்கத்தின் மேல் வை. நீ உண்ணும் உணவைக் கொணடு வந்து நிவேதனமாக வை. விளக்கேற்றி வை. இரு கரங்கள் கூப்பி கும்பிடு போடு" என்று அலட்சியத்தோடு கூறினான். மன்னன் சொன்ன விவரங்களையெல்லாம் சண்டன் கவனமாகக் கேட்டுக் கொண்டான். மன்னன் சிங்ககேது கூறியதையெல்லாம் அப்படியே மனதில் பதித்துக் கொண்டான் சண்டன். தோற்பையில் தண்ணீர் கொண்டுவந்து சிவலிங்கத்தின்மீது ஊற்றினான். சுடலையைத் தேடிச் சென்று, கை நிறைய வெந்த சாம்பலை அள்ளிக்கொண்டு வந்து சிவ லிங்கத்தின்மீது பூசினான். கைக்குக் கிடைத்த காட்டுப் பூக்களையெல்லாம் கொண்டுவந்து சிவலிங்கத்தின்மீது வைத்தான். தான் உண்ணும் உணவையே நிவேதனமாகப் படைத்தான். விளக்கேற்றி வழிபட்டான். இதனையே உறுதியாகக் கொண்டு தினமும் பூஜை செய்து வந்தான். இரவும் பகலும் அவன் நினைவில் சிவலிங்கமே நிறைந்திருந்தது. ஒரு நாள் சுடலையின் வெந்த சாம்பல் அகப்படாமல் போயிற்று. சிவபூஜை தடைப்பட்டது. இதனால் சண்டன் மிகுந்த கவலையுடன் இருந்தான். உண்ணாமல் உறங்காமல் உற்சாகமின்றிக் காணப்பட்டான். அவனுக்கு எதுவுமே சொல்லத் தோன்றவில்லை. இதனை அவனது கற்புடைய மனைவி சண்டிகா அறிந்து மனம் மிக நொந்தாள். கணவனை நோக்கி, அன்பரே, நீங்கள் சிவபூஜையைத் தொடர்ந்து செய்ய ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. நாம் குடியிருக்கும் இந்தக் குடிசையைக் கொளுத்தினால், நான் அதில் விழுந்து வெந்து சாம்பலாவேன். அந்த சாம்பலை எடுத்துக்கொண்டு போய் சிவலிங்கத்திற்குப் பூசுங்கள். உங்கள் விருப்பப்படியே பூஜையும் இனிதே நடக்கும் என்றாள் சண்டிகா. கள்ளங்கபடமில்லாத சண்டனும் அப்படியே செய்து முடித்தான். பூஜை முடிவில் வழக்கப்படி நிர்மால்யம் கொண்டு போனான். அன்று சிவராத்திரி என்று அவனுக்குத் தெரியாது. மெய் மறந்து வழிபட்ட நிலையில், அவன் செய்த புண்ணியத்தால், இறைவன் அவன் முன் தோன்றி அருள்பாலித்தார். அவன் மனைவி சண்டிகாவை உயிர்ப்பித்தார். குடிசையும் முன்பு இருந்தது போலாயிற்று. வேடன் சண்டன் ஞானம் வரப்பெற்றவனாய் இறைவனைப் போற்றினான். சிவகணங்கள் எதிர்கொள்ள கயிலையை அடைந்தான். எதுவும் தெரியாமலும், தன்னை அறியாமலும் செய்யும் சிவராத்திரி வழிபாடு கூட பலன் தரும். இப்படி அறியாமல் செய்த பூஜைக்கே பலனுண்டு என்றால் சிவராத்திரியை அறிந்தே பூஜை செய்பவர்களுக்கும், ஆலயம் சென்று முறையே வழிபாடு செய்பவர்களுக்கும் எத்தகைய புண்ணியம் வந்து சேரும் என்பதை எண்ணி பாருங்கள்.

செல்வம் தரும் சிவராத்திரி: மகாபாரதம் சாந்தி பர்வத்தில் சிவராத்திரியின் மகத்துவம் கூறப்பட்டுள்ளது. அம்பு படுக்கையில் கிடந்த பீஷ்மர், சிவராத்திரி விரத மகிமையை பாண்டவர்களுக்கு சொன்னார். இக்ஷ்வாகு குலத்தில் பிறந்த மன்னர் சித்திரபானு. அஷ்டவக்கிர முனிவர் ஒரு சிவராத்திரி நாளில் மன்னனைச் சந்திக்க வந்தார். விரதமிருந்த மன்னன் முனிவரிடம், ஐயனே! நான் சுஸ்வரன் என்னும் வேடனாக முற்பிறவியில் வாழ்ந்தேன். வேட்டையாடி மாமிசத்தை விற்பது என் தொழில். ஒருநாள், பகலில் மிருகம் ஏதும் சிக்கவில்லை. இரவான பிறகு மான் ஒன்றைக் கொன்றேன். காட்டிலேயே தங்கிவிட்டேன். மிருகங்களிடமிருந்து தப்ப ஒரு மரத்தில் ஏறிக் கொண்டேன். பசிமயக்கத்தால் தூக்கம் வரவில்லை. இலைகளைப் பறித்து கீழே போட்டபடி இருந்தேன். பொழுது புலர்ந்து விட்டது. அந்த நாள் சிவராத்திரி என்பதை அப்போது நான் அறிந்திருக்கவில்லை. மரணம் ஏற்பட்டு என் உயிர் நீங்கிய பின், இரு சிவதூதர்கள் என்னை அழைத்துச் செல்ல வந்தனர். நீ வேட்டையாடச் சென்ற நாள் சிவராத்திரி. அன்று நீ ஏறியது வில்வமரம். மரத்தடியில் ஒரு சிவலிங்கம் இருந்தது. நீ வில்வ இலைகளைப் பறித்துப் போட்டபடி இருந்தாய். உறங்கவும் இல்லை. அறியாமல் செய்தாலும், சிவராத்திரியன்று லிங்கத்துக்கு வில்வார்ச்சனையால் உனக்கு நற்கதி கிடைத்தது என்றனர். அதனால், நாடாளும் மன்னனாக சித்திரபானு என்ற பெயரில் இப்பிறவியில் பிறக்கும் பேறு பெற்றேன் என்றார். பக்தியுடன் சிவராத்திரி விரதம் இருப்பவர்கள், எத்தனை பிறவி எடுத்தாலும் பணக்காரர்களாக இருப்பர். அவர்களது சந்ததியும் செல்வவளத்துடன் திகழும்.

சிவராத்திரி விரதமுறை: சிவராத்திரி நாளில் உணவேதும் உண்ணாமல் சிவ சிந்தனையுடன் இருக்கவேண்டும், முடியாதவர்கள் பால், பழம் அருந்தியும் விரதம் மேற்கொள்ளலாம். கோவிலுக்கு சென்று இறைவனை தரிசித்து அறியாமல் செய்த பாவங்களைப் போக்கி அருளுமாறு பிரார்த்திக்க வேண்டும். இரவு முழுவதும் விழித்திருந்து ஓம் நமசிவாய மந்திரங்களை ஜபிக்கவேண்டும்.

சிவராத்திரி விரத மகிமை: விரதங்கள் பலவும் அதனைக் கடைப்பிடிப்போர்க்கு மட்டுமே பலன் தரும். மகாசிவராத்திரியன்று விரதம் இருப்பவர்களுக்கு நற்கதி கிடைப்பதுடன் சொர்க்கலோக பாக்கியமும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. ஒருவர் தொடர்ந்து 24 வருடங்கள் சிவராத்திரி விரதம் இருந்துவந்தால் அவர் சிவகதியை அடைவதுடன், அவரது 21 தலைமுறைகளும் நற்கதி அடைந்து முக்தியை அடைவார்கள் என்பது ஐதீகம். அசுவமேத யாகம் செய்த பலனும் கிடைக்கும்.

எனவே சிந்தை மகிழ சிவபுராணம் ஓதி சிவன் அருளால் அவன் தாள் பணிந்து பிறவி பெரும் பிணித் தீர்ப்போம்.

**தென்னாடுடைய சிவனே போற்றி!**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!!**

# மாசி மகம்

...Sumathisrini

**மாசி மகம்** என்பது மாசி மாத பௌர்ணமியுடன் கூடிவரும் மக நட்சத்திர நாளில் இந்துக்களால் கொண்டாடப்படும் ஒரு சிறப்பான நாளாகும். அன்றைய தினம் **'கடலாடும் விழா'** என்று கொண்டாடப்படுகிறது. **அம்பிகை** மாசி மக நட்சத்திரத்தில் அவதரித்தால் மாசிமகம் பெருமை பெறுகின்றது.

பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து துன்பக்கடலில் மாய்ந்தழுந்தும் ஆன்மாவானது இறைவனது அருட்கடலாகிய இன்பவெள்ளத்தில் அமிழ்ந்து திளைக்கச் செய்யும் நன் நாளே மாசிமகக் கடலாடு தீர்த்தமாகும். தீர்த்தமாட இயலாதவர்கள் விரதமிருந்து கோயிலுக்குச் சென்று இந்நாளைக் கொண்டாடுவர்.

**பக்தனுக்காய் கடல்நீரை இரைத்த பெருமாள்!**
மக நட்சத்திரம் திருமாலுக்கும் உகந்த நாள். நீர் நிலை உள்ள இடங்களில் தீர்த்தவாரி உற்சவம் நடைபெறுவது வழக்கம். இப்படி தீர்த்தவாரிக்குப் பெயர் பெற்ற 108 திவ்யதேசங்களில் ஒன்று தான் மகாபலிபுரம். இங்கு மாசி மகத்தன்று நீராடினால் அது ராமேஸ்வரத்தில் நீராடிய பலனைத் தரும். இதற்குக் காரணமானவர் புண்டரீக மகரிஷிதான். திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள பெருமாளின் காலடியில் அன்றலர்ந்த தாமரை மலரை வைத்து வணங்க வேண்டும் என்ற ஆவலில் இவர் மாமல்லை கடற்கரையில் மலரை வைத்துவிட்டு, பாற்கடலுக்கு வழி ஏற்பாடு செய்ய முயற்சித்தார். அதற்காக கடல்நீரை தொடர்ந்து இரைத்துக் கொண்டிருந்தார். இவரின் விடா முயற்சியையும், தளராத பக்தியையும் கண்ட திருமால் ஒரு முதியவராக உருக்கொண்டு முனிவரிடம் வந்து, எனக்கு பசியும்



களைப்புமாக உள்ளது. ஊருக்குள் சென்று உணவு வாங்கி வாருங்கள். அதுவரை நானே கடல் நீரை உமக்காக இறைக்கிறேன் என்று அனுப்பினார். முனிவரும் உணவு வாங்கி வந்து பார்த்தபோது கடல் உள்வாங்கி இருந்தது. முதியவரைக் காணோம். அப்போது ஒரு குரல் கேட்டது. முனிவர் அவ்விடத்தைப் பார்க்க, தான் வைத்த மலரை பாதங்களில் வைத்துக்கொண்டு திருமால் தரையில் பள்ளி கொண்டு ரிஷிக்கு காட்சி தந்தார். ஸ்ரீமன் நாராயணனே தன் திருக்கரத்தால் நீர் இறைத்த இந்த அர்த்தசேது கடலில் மகத்தன்று நீராடுவது பெரும் புண்ணியம்.

**மாசிமகச் சிறப்பு**

மாசி மாதம் முழுவதுமே புண்ணிய நீராடிட ஏற்ற புனித மாதமாகும். இம்மாதம் தவிர வேறு எப்போதெல்லாம் புனித நீராடலாம் என புராணங்கள் சொல்கின்றன. அவை: அமாவாசை, பவுர்ணமி, மாதப்பிறப்பு, இரண்டு அயன காலங்கள், வெள்ளிக்கிழமை, கார்த்திகை, சிவராத்திரி, மாசிமகம், மகாமகம் நாட்கள். மகாமகத் திருவிழாவை முதலில் துவக்கி வைத்தவர், பிரம்மதேவன். 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாசி மகத்தன்று கும்பகோணம் மகாமகக் குளத்தில் புனித நதிகள் யாவும் வந்து கலப்பதாகவும், அன்று புனித நீராடினால் புண்ணியப்பேறுகள் நம்மை வந்து சேரும் என்றும் மகாபுராணம் சொல்கிறது. அத்தினமே மகாமகம். மாசி மாதத்தில் மாசி மகப் பெருவிழா பத்துத் தினங்கள் வரை நடைபெறும். அசுவினி நட்சத்திரம் கூடிய நன்நாளில் கொடி ஏற்றஞ் செய்து எட்டாவது நாளில் தேரோட்டமும், பத்தாம் நாளான மகம் நட்சத்திரம் கூடிய பௌர்ணமி நாளில் பஞ்சமூர்த்திகளும் புறப்பட்டு மகாமக தீர்த்தக் குளத்தில் தீர்த்தவாரி நடக்கும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாசி மகம் நாளில் குரு, சிம்ம ராசியிலும் சூரியன், கும்ப ராசியிலும் வரும். அந்நாளே மகாமகப் பெருவிழா. ராமர், ராவணனை வதம் செய்வதற்காக சிவனருள் பெற வேண்டி, அகத்திய முனிவரின் ஆலோசனையை நாடினார். அம்முனிவர், கும்பகோணம் வந்து சில காலம் தங்கி இத்தலத்திலுள்ள காசி விஸ்வேசுவரரை வழிபட்டால் உருத்திராம்சம் பெறலாம் எனக்கூறினார். அதன்படி ராமர் இங்கு வந்து விஸ்வேசுவரரை வழிபட்டு, தன் உடலில் உருத்திர அம்சம் ஆரோகணிக்கப் பெற்றார். அதன் காரணமாக இவ்விடமும் காரோணம் எனப் பெயர் பெற்றதாகக் கூறுவர். இதன் பழைய பெயர், **திருக்குடந்தைக் காரோணம்**. மகாமகக் குளத்தின் வடகரையில் உள்ளது இக்கோயில்.

**மாசிமகத்தில் விளக்கு ஏற்றுங்க**

ஸ்ரீரங்கத்திற்கு எவ்வளவு சிறப்புண்டோ அத்தனையும் கொண்ட சிறப்பான திவ்யதேசம் திருக்கோஷ்டியூர். மந்திர உபதேசம் பெற வேண்டி ராமானுஜர், திருக்கோஷ்ட்டியூர் நம்பியை 18 முறை தேடி வந்தது இங்கு தான். உலக மக்கள் அனைவருக்கும் '**ஓம் நமோ நாராயணாய**' என்ற எட்டெழுத்து மந்திரத்தை ராமானுஜர் உபதேசித்ததால் (ஓம் என்பது ஓரெழுத்து) திருமந்திரம் விளைந்த திவ்யதேசம் என்ற பெருமை இதற்குண்டு. பேரழகு



கொண்டவர் என்பதால் இங்கிருக்கும் பெருமாளுக்கு சௌம்யநாராயணர் என்பது திருநாமம். பொதுவாக கோயில்களில் உற்சவர் விக்ரகங்களை பஞ்சலோகத்தால் அமைப்பர். ஆனால், தூய்மையான வெள்ளியால் ஆன விக்ரகம் இங்குள்ளது. இதை தேவலோக இந்திரனே தந்ததாக ஐதீகம். இப்பெருமானை திருமங்கையாழ்வார், வெள்ளியான் கரியான் மணிநிற வண்ணன் என்று போற்றுகிறார். இங்குள்ள தாயாருக்கு திருமாமகள், நிலமாமகள், குலமாமகள் ஆகிய பெயர்களுண்டு. **மகாமகக் கிணறு** என்னும் **சிம்மக்கிணறு** இங்குள்ளது. இதில் மாசிமகத்தில் நீராடுவது சிறப்பு. மாசிமகத்தன்று இங்கு தெப்பத்திருவிழா நடைபெறும். சௌம்யநாராயணரிடம் ஏதாவது வேண்டுகோள் வைத்து அது நிறைவேறியவர்கள், தெப்பக்குளத்தில் தீபமேற்றி வழிபடுவது

Spiritual Pages

## தமிழ் மந்திரம்

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

வழக்கமாகும். அந்த விளக்கை புத்திர பாக்கியம், திருமணம் போன்ற கோரிக்கைகளை வைப்பவர்கள் வீட்டிற்கு எடுத்துச் சென்று பூஜையறையில் வைத்துக்கொள்ளலாம். வேண்டுதல் நிறைவேறியதும், அடுத்த மாசிமகத்தன்று மீண்டும் அந்த விளக்குடன் மேலும் 3 அல்லது 5 அகல் விளக்குகளை ஏற்றி வைப்பது மரபாகும்.

**குளத்தில் நீராடும் ஆறு**
காவிரிநதி ஏழு கட்டங்களாக பாய்ந்து வளம் பெருக்குகிறது. தலைக்காவிரி, அகன்றகாவிரி, பஞ்சநதம், கும்பகோணம், மத்தியார்ச்சுனம், மயிலாடுதுறை, காவிரிப்பூம்பட்டினம் ஆகியன அவை. இவற்றில் நடு நாயகமாகத் திகழும் தலம் கும்பகோணம். ஒரு சமயம், வெள்ளத்தால் உலகம் அழிய இருந்த வேளையில், மீண்டும் உயிர்களை படைப்பதற்கான பீஜம் தாங்கிய அமுத கும்பத்தை பிரம்மா நீரில் மிதக்க விட்டார். அது வெள்ளத்தில் மிதந்து ஒதுங்கிய இடமே கும்பகோணம். மாசிமகத்தன்று கும்பகோணம் கும்பேஸ்வரர் கோயில் பிரதான வழிபாட்டுத் தலமாகத் திகழ்கிறது. இங்குள்ள தீர்த்தம் மகாமகத் தீர்த்தம். காசியில் ஓடும் புனித கங்கையும் தன் பாவம் தீர நீராடும் குளம் இது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் பெருமை பெற்ற தலம். இதே போல வட இந்தியாவில் கும்பமேளா என்ற பெயரில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள்.

**மாசிமக தலம்**
முன்னொரு சமயம், வெள்ளத்தால் உலகம் அழிய இருந்த வேளையில், படைப்புக்கலன்கள் தாங்கிய அமுதக்குடத்தை, பிரம்மா மேருமலையில் வைத்திருந்தார். பிரளய வெள்ளம் பெருக்கெடுத்து அதில் மிதந்த குடம் தென்பகுதி வந்து சேர்ந்தது. வேடனாக வந்த சிவபெருமான், திருவிடைமருதூரில் தங்கினார். பாணம் ஒன்றை எடுத்து குடத்தைக் குறிவைத்தார். பாணம் எய்த இடம் பாணாத்துறை ஆயிற்று. இவ்வூர் கும்பகோணத்துக்கு வடகிழக்கே உள்ளது. குடம் உடைந்து ஐந்து இடங்களில் சிதறியது. வடமேற்கே சுவாமிமலையிலும், தென்மேற்கே தாராசுரத்திலும், தென்கிழக்கே திருநாகேஸ்வரத்திலும், கிழக்கே திருவிடைமருதூரிலும், வடகிழக்கே கருப்பூரிலும் அமுதம் சிதறி விழுந்தது. இத்தலங்களை "பஞ்சகுரோசத் தலங்கள் என்று குறிப்பிடுவர். "குரோசம்" என்றால் கூப்பிடு தூரம். அருகருகே இந்த தலங்கள் உள்ளதால், இப்பெயர் பெற்றன

**குடத்தின் வடிவில் குளம்**
கும்பகோணம் மகாமகக்குளதை மேலிருந்து பார்த்தால் குடம்போல காட்சியளிக்கும். இக்குளத்தில் புனித நீராடினால் அமுதக் குடத்திற்குள்ளேயே நீராடியது போலாகும். பொதுவாக ஒருவரின் பாவம் புண்ணியதீர்த்தம் எதில் நீராடினாலும் நீங்கும் என்பது சாஸ்திர விதி. புண்ணியத் தலங்களில் பிறந்தவர்கள் செய்த பாவம் கங்கையில் நீராடினால் நீங்கும். ஆனால், காசியில் பிறந்தோர் கும்பகோணத்தில் நீராடினால் தான் பாவம் விலகும். கும்பகோணத்தில் பிறந்தவர்கள் எங்கும் செல்லத் தேவையில்லை. மகாமகக்குளத்தில் நீராடினாலேயே விலகிவிடும். இதனை "கும்பகோணேக்ருதம் பாவம் கும்பகோணே விநச்யதி" என்பர்.

**Spiritual Notebook - Rudhraa**

**பிப்ரவரி**
- 14 - வசந்த பஞ்சமி
- 17 - ரத சப்தமி
- 18 - அஷ்டமி
- 21 - ஏகாதசி
- 23 - சனி பிரதோஷம்
- 25 - பௌர்ணமி, மாசி மகம்

**மார்ச்**
- 07 - ஏகாதசி
- 09 - சனி பிரதோஷம்
- 10 - மகாசிவராத்திரி

# Movie Review

...Geetha A@Anu




படம் வருவதற்கு முன்பே பெரும் எதிர்ப்பார்ப்பிற்கு உள்ளாகி இருந்த ஒரு படம். ஓ...! கண்டு பிடிச்சிட்டீங்களா? சரி படம் எப்படி இருக்குன்னு பாக்கலாம் வாங்க.

முக்கியமாகச் சொல்ல வேண்டிய விஷயம். இது நாட்டிற்கு ரொம்பத் தேவையான முக்கிய பிரச்சினைகளைப் பற்றிய படமோ அல்லது கருத்துப் படமோ இல்லைங்க. முழுக்க முழுக்க நகைச்சுவையை மையமாகக் கொண்ட படம். இதில் மூன்று கதாநாயகர்களும், அவர்கள் சுற்றி வருவதற்கு ஒரு கதாநாயகியும், முக்கியமான நிறையக் கதாபாத்திரங்களும் உண்டு.

கலியப்பெருமாள் (சந்தானம்), செல்லப் பெயர் கேகே (கல்யாணம் முதல் கருமாந்திரம் வரை), பவர் ஸ்டார் (சீனிவாசன்), சிவா (சேது) இவர்கள் மூவரும் நண்பர்கள். பெண்கள் என்றால் அவ்வளவு உயிர் (அப்படி ஒரு ஜொள்ளு!). சிவாவின் வீட்டிற்கு அருகே உள்ள வீட்டிற்கு சௌமியா (விஷாகா) குடி வருகிறார். சௌமியாவைப் பார்த்ததும், மூன்று பேரும் காதலில் விழுகிறார்கள். இதனால் நண்பர்களுக்குள் போட்டியும், சண்டையும் வருகிறது. பின்பு சமாதானமாகி ஒரு முடிவிற்கு வருகிறார்கள். மூன்று பேரும் முயற்சி செய்வோம். சௌமியா யாரை விரும்புகிறாரோ மற்றவர்கள் விலகிக் கொள்ள வேண்டும் என்று.

சௌமியாவின் மனதைக் கவர இவர்கள் எடுக்கும் முயற்சியே கண்ணா லட்டு தின்ன ஆசையா?

இந்த படம் 'இன்று போய் நாளை வா' என்ற கே.பாக்கியராஜ் படத்தைத் தழுவி எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன வித்தியாசம் என்றால் பழைய மதுவை புதுக் கோப்பையில் ஊற்றிக் கொடுத்திருக்கிறார்கள். சந்தானம் இந்த படத்தின் மூலம் தயாரிப்பாளர் அவதாரமும் எடுத்திருக்கிறார். திரு மணிகண்டன் அவர்கள் இயக்கி இருக்கிறார்கள்.

பவர் வரும் இடங்களில் நம்மையும் அறியாமல் சிரிப்பு வருகிறது. சௌமியா மனதைக் கவர அவர் தந்தையிடம் நடனம் பயில வரும் பவர், அவர் சித்தப்பாவிடம் பாடல் பயில வரும் கேகே, சித்தியிடம் வீட்டு வேலை செய்யும் சிவா, இந்த இடங்களைச் சுற்றிக் கதை நகர்கிறது. சில இடங்கள் ரசிக்க வைத்தாலும், பல இடங்கள் நம்மை நெளிய வைக்கின்றன. உதாரணத்திற்கு இரட்டை அர்த்த வசனங்கள் மற்றும் வயதானவர்களை அவன், இவன் என்று சொல்லி சந்தானம் கலாய்ப்பது முகம் சுளிக்க வைக்கின்றது. இவைகளை தவிர்த்து இன்னும் கொஞ்சம் நன்றாக நகைச்சுவையைச் சேர்த்திருக்கலாம்.

நிறைய திறமையான கலைஞர்களை வீணடித்து விட்டார்கள். கோவை சரளா, ராஜா, விடிவி கணேஷ், கணேஷ்கர், தேவதர்ஷினி, சிவசங்கர் மற்றும் பலர்

Movie Review

# கண்ணா லட்டு தின்ன ஆசையா!

நடித்திருக்கிறார்கள். எந்த கதாபாத்திரமும் மனதில் நிற்கவில்லை. சௌம்யா இன்னும் கூட நடிப்பில் அக்கறை செலுத்த வேண்டுமோ? நிறைய விளப்பரப் படங்களில் பார்த்து, நமக்கு நெருங்கிய முகமாக தெரிகிறார். கவர்ச்சியைத் தாராளமாக வழங்கி இருக்கிறார்.

பவரை கலாய்க்கும் இடங்கள், உதாரணத்திற்கு "நானாவது காமெடியன்னு தெரியும், ஆனா நீ இன்னும் காமெடியன்னு தெரியாமயே இருக்கிற பாரு அதுதான் பெரிய காமெடி" என்று சந்தானம் கலாய்ப்பது மிக ரசிப்பு.

சிறப்புத் தோற்றமாக சிம்பு மற்றும் கவுதம் மேனன் வருகிறார்கள். இசை எஸ்.தமன். அவ்வளவாக நெஞ்சில் நிற்கவில்லை. 'லவ் லெட்டர் எழுத ஆசப்பட்டேன்' என்ற பாடல் ரசிகர்களால் ரசிக்கப்படுகின்றது.

தவிர்க்கவே முடியாமல் நிறைய இடங்களில் பழைய படம் ஞாபகம் வருகிறது. Old is Gold ன்னு சும்மாவா சொன்னாங்க.

கண்ணா லட்டு தின்ன ஆசையா? சர்க்கரைக் குறைவு.
இன்னும் கொஞ்சம் சர்க்கரையைச் (நகைச்சுவையை) சேர்த்திருக்கலாம். மீண்டும் சந்திபோமா?



# Jokes

## Silentsounds @ Guna

**கஸ்டமர்:** 2013 காலண்டர்ல என்ன ஸ்பெஷல்?

**கடைக்காரர்:** பவர் கட்டாகிற நேரத்த போட்டுருக்காங்க.

## Ramyas

என் நண்பன் சொன்ன அந்த மூன்று வார்த்தை:

அம்மா சொன்ன வார்த்தையை விட பெரியது, காதலர்கள் சொன்ன வார்த்தையை விட இனியது,

“மச்சி நானும் ஃபெயில்”

## Naliniselva

**மாப்பிள்ளை வீட்டார்:** பொண்ணு புடிச்சிருந்தா தான் சாப்பிடுவோம்.

**பெண் வீட்டார்:** பொண்ணு புடிச்சிருக்குன்னு சொன்னாதான் சமையலே ஆரம்பிப்போம்.

## myworld @ Anitha

Physics would have been much easier...
If...
If...
If...
If...
The tree itself had fallen on Newton’s head instead of the Apple..!!

## kirthika99 @ Karkuzhali Shanmugam

**Law Professor:** Which is the most important LAW of Finance for Starting a New Business?

**Student:** Father-in-Law!

## Naliniselva

**டாக்டர்:** ஆபரேஷன் முடிந்து நீங்க நடந்தே வீட்டுக்குப் போகலாம்.

**நோயாளி:** ஆட்டோவுக்குக் கூடக் காசு இருக்காதா டாக்டர்?

## smahi

**மேன் 1:** என் பையன் ஃபஸ்ட் கிளாஸ்ல பாஸ் பண்ணிட்டான்.
**மேன் 2:** மேல என்ன படிக்க வைக்கப் போறீங்க?

**மேன் 1:** செகண்ட் கிளாஸ் தான்.
**மேன் 2:** ????

தமிழும் ! அழகும்!!!

# வள்ளுவன் பக்கம்

...Parasakthi

**குறள் பால்: அறத்துப்பால்**
**குறள் இயல் : பாயிரவியல்**
**அதிகாரம்: நீத்தார் பெருமை**

21. **ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவல் துணிவு**
**விளக்கம் :**
தமக்குரிய ஒழுக்கத்தில் வாழ்ந்து, ஆசைகளை அறுத்து, உயர்ந்த மேன்மக்களின் பெருமையே, சிறந்தனவற்றுள் சிறந்தது என்று நூல்கள் சொல்கின்றன.
**ஆங்கில மொழிபெயர்ப்பு:**
The settled rule of every code requires, as highest good, Their greatness who, renouncing all, true to their rule have stood.
**Explanation :**
The end and aim of all treatise is to extol beyond all other excellence, the greatness of those who, while abiding in the rule of conduct peculiar to their state, have abandoned all desire.

22. **விளக்கம் துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து**
**இறந்தாரை எண்ணிக்கொண் டற்று**
**விளக்கம் :**
ஆசைகளை விட்டு விலகியவரின் பெருமைக்கு, எண்ணிக்கையால் அளவு கூறுவது, இந்த உலகத்தில் இறந்து போனவர்களின் எண்ணிக்கையை எல்லாம் எண்ணுவது போலாகும்.
**ஆங்கில மொழிபெயர்ப்பு:**
As counting those that from the earth have passed away, 'Tis vain attempt the might of holy men to say.
**Explanation :**
To describe the measure of the greatness of those who have forsaken the two-fold desires, is like counting the dead.

23. **இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்**
**பெருமை பிறங்கிற்று உலகு.**
**விளக்கம் :**
இம்மையின் துன்பத்தையும் மறுமையின் இன்பத்தையும் அறிந்து, மெய் உணர்ந்து, ஆசைகள் அறுத்து எறியும் அறத்தைச்செய்தவரின் பெருமையே, இவ்வுலகில் உயர்ந்து விளங்குகிறது.
**ஆங்கில மொழிபெயர்ப்பு:**
Their greatness earth transcends, who, way of both worlds weighed, In this world take their stand, in virtue's robe arrayed.
**Explanation :**
The greatness of those who have discovered the properties of both states of being, and renounced the world, shines forth on earth (beyond all others).

24. **உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்**
**வரனென்னும் வைப்பிற்கோர் வித்தது.**
**விளக்கம் :**
மெய், வாய்,கண், மூக்கு, செவி என்னும் ஐந்து யானைகளும் தத்தம் புலன்கள் ஆகிய ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை ஆகியவற்றின் மேல் செல்லாமல், அவற்றை மன உறுதி என்னும் அங்குசத்தால் காப்பவன் எல்லாவற்றிலும் சிறந்ததாகிய வீட்டுலகிற்கு ஒருவிதை ஆவான்.
**ஆங்கில மொழிபெயர்ப்பு:**
He, who with firmness, curb the five restrains, Is seed for soil of yonder happy plains.
**Explanation :**
He who guides his five senses by the hook of wisdom will be a seed in the world of heaven.

25. **ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்**
**இந்திரனே சாலுங் கரி.**
**விளக்கம் :**
அகன்ற வானத்து வாழ்பவரின் இறைவனாகிய இந்திரனே, புலன்வழிப் பெருகும் ஆசை ஐந்தையும் அறுத்தவனின்வலிமைக்குத் தகுந்த சான்று ஆவான்
**ஆங்கில மொழிபெயர்ப்பு:**
Their might who have destroyed 'the five', shall soothly tell Indra, the lord of those in heaven's wide realms that dwell.
**Explanation :**
Indra, the king of the inhabitants of the spacious heaven, is himself, a sufficient proof of the strength of him who

# நீயா? நானா?....

...Surya

கடந்த மாதம் நடைபெற்ற நீயா நானாவின் தீர்ப்பும், அதில் சிறப்பாக பேசியவற்றின் மேற்கோள்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**தலைப்பு**

**"இன்றைய சமுதாய அவலங்களுக்குக் காரணம் தனி மனிதனா அல்லது சமூகமா?"**

சமூக பார்வையோடு, காலத்தின் தேவை அறிந்து சமூக மறுமலர்ச்சிக்குத் தேவையான இந்த விவாதம் பெண்மை கருத்துக்களத்தில் ஏற்பட்டுள்ள முதிர்ச்சியின் அடையாளமே. சமூகத்தின் அடிப்படை அலகு தனி மனிதன், தனி மனிதனின் ஒட்டு மொத்த சேர்க்கை தான் சமூகம். எனவே இவ்விரண்டையும் இரு துருவங்களாகவும் காண முடியும், அதே சமயம் ஒன்றுக்குள் ஒன்றாகவும் காண முடியும்.

அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் சொல்லுவார், **"சமுதாய அமைப்பிலுள்ள குறைபாடே தனிமனிதன் குற்றங்களுக்கு மூலமாகும். சமுதாய அமைப்பு முறையை சீர்திருத்திப் பொருட்கள் சமத்துவமாய் அனைவருக்கும் கிடைக்கும்படி செய்தால் உலக சமுதாயத்தில் குற்றம் நிகழ இடமில்லை".**

இது சமூகத்தின் குறைபாடு என்றும், இதையே MGR அவருடைய பாடலில்'

**"தனி ஒரு மனிதன் திருந்தி விட்டால் சிறைச்சாலைகள் தேவை இல்லை இருப்பதை எல்லாம் பொதுவில் வைத்ததாலே எடுப்பவர் யாரும் இல்லை பிறவியில் எவனும் பிழைகளை சுமந்தே வாழ்க்கையைத் தொடங்கவில்லை - பின்பு அவனிடம் வளர்ந்த குறைகளைச் சொன்னால் வார்த்தையில் அடங்கவில்லை..."** என்று தனி மனித ஒழுக்கத்தின் தேவையையும், சமூக அமைப்பின் குறைபாட்டையும் ஒருங்கே சொல்வார். உலகளாவிய பல சித்தாந்தம் இன்றளவும் நிலைத்து நின்று உலகை ஆள்வது, சமூகம் மற்றும் தனி மனிதனை முன்னேற்றுவதை நோக்கமாக கொண்டதால் தான். மற்ற இன்ன பிற சித்தாந்தம் அதை தோற்றுவித்தவர் காலத்திலேயே அமிழ்ந்து, அழிந்து விட்டது.

காந்திய, கம்யூனிச, பெரியாரியல் தத்துவமும் அதை போதித்த தலைவர்களும் இன்றளவும் நிலைத்து நிற்பதற்குக் காரணம் அவர்கள் சமூக, தனி மனித பிரச்சனைகள் மற்றும் அதன் தீர்வுகள் கண்டு வழி கூறியதால் தான்.



கருத்தினை பதிவு செய்த பெண்மை தோழமைகள் கருத்துக்கள் முறையே... "இன்றைய சமூக அவலங்களுக்கு காரணம் மதுவே; அந்த மதுவை ஒழித்து விட்டால் தான் தனி மனிதனும் சமூகமும் ஒருங்கே முன்னேறும்" என்று கூறி மாலினி ரவி அவர்கள் தன் வாதத்தை முன் வைத்துள்ளார்.

கேசவன் அவர்களோ "குடும்பம் என்பது சிறிய அளவிலான தனி மனிதர்களின் கூட்டமைப்பே. தவறுகளை செய்ய வழி அமைத்துக் கொடுப்பது சமூகமே" என்று கூறியுள்ளார்.

"ஒருவன் கொலை செய்தால் அவனது வீட்டில் உள்ள மற்றவர்கள் நல்லவர்களாய் இருந்தாலும் அவர்களுக்கும் அவப்பெயரே வந்து சேரும். அதைப்போலத்தான் ஒரு சமூகத்தில் ஒருவர் செய்யும் குற்றத்தால் அந்தச் சமூகமே தலைகுனிய வேண்டியதாகிறது" என்று தன் தெளிவான கருத்துக்களுடன் தனி மனிதனின் ஒழுக்கமின்மையே சமூக அவலங்களுக்கு காரணம் என்று சுட்டியுள்ளார் ப்ரியா.

சிந்து பைரவி அவர்களோ, "திரைப்படத்தின் ஆதிக்கம், மதுப் பழக்கம், கூடா நட்பு, குடும்ப அமைப்பு என பல வழிகளில் தனி மனிதனின் ஒழுக்கம் கெடுகிறது. அவனுடைய விழிப்புணர்வு இன்மையே இதற்குக் காரணம் என்றும், இதற்கு தனி மனிதனே காரணம்" என்று தன் கருத்தை கூறியுள்ளார்.

"தனி மனித ஒழுக்கம் தான் முக்கியம், பணமோ பொருளோ இதை ஈடுகட்டாது என்றும், கலாச்சாரமே மனித வாழ்வின் நடத்தையை தீர்மானிக்கிறது" என்று தோழி வெண்ணிலா அவர்கள் கூறியுள்ளார்.

"தனி மனிதர்கள் சேர்ந்த தொகுதியே சமுதாயம், தனி மனிதன் வளரும் சூழல் பொறுத்தே அவன் வளர்ச்சி அமைகிறது. எனவே தனி மனிதனின் பங்கே இதில் அடங்கி உள்ளது. எல்லாவற்றிலும் நல்ல விடயங்களைக் காணும் பக்குவத்தைக் கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு மனிதனும் நல்லது, கெட்டது பிரித்தறிந்து, பொறுப்புணர்வுடனும் மனிதத்தன்மையுடனும் தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் குடும்பம் மட்டுமல்ல, சமுதாயமே பாதிப்படையாது என்பதில் ஐயமில்லை" என்று தெளிவு பட தன் கருத்தை கூறி வியக்க வைத்து விட்டார் தோழி கௌரி மோகன் அவர்கள்.

"சமுதாயம் என்ற அமைப்பே தனிமனிதனின் கூட்டு, எனவே இதில் சமூகத்தின் மீது பழிபோடுவது முறையாகாது. தனி மனித ஒழுக்கமே முதன்மையானது, அதுவே சமூக வளர்ச்சிக்கும், தாழ்ச்சிக்கும் முக்கியமான காரணம் ஆகிறது" என்பது தேவிசங்கர் அவர்களின் வாதம்.

தோழி விஜி அவர்களின் கருத்து உண்மையில் தனிமனிதனின் பார்வையில் இருந்து வந்ததன் வெளிப்பாடே. இந்தக் கருத்து சமூகத்துடன் கலப்பு இல்லாமல் அவனின் தனி சிந்தனையின் சாராம்சம். எப்படி ஒரு தனி மனிதன் சமூகத்தை கெடுக்கிறான், சமூக பங்களிப்பு இல்லாமல் அவனின் செயலால் நடைபெறும் தீமை பற்றிய இந்த வாதம் அற்புதம்...

"தனி மரம் தோப்பாகாது!!! அது போல, தனி மனிதன் சமூகம் இல்லை. அனைவரும் சேர்த்தது தான் சமூகம். ஒரு சிறு தீக்குச்சியை வைத்து விளக்கும் ஏற்றலாம்,குடிசையையும் கொளுத்தலாம். அது போல, ஒரு தனி மனிதனின் செயல் சமூகத்திற்கு நன்மையையும் செய்யலாம், தீமையையும் செயயலாம். ஆக ஒரு தனி மனிதனின் செயலால் பலன் அடைவது இந்த சமூகம். ஆகவே தனி மனிதன் நல்லவனாக இல்லை என்றால் பாதிப்பு அடைவது இந்த சமூகம்".

சமூக அவலங்களை, சீர்கேடுகளை திரை மறைவாய் கூறாமல் நேர் படக் கூறியுள்ளார் மேரி டெய்ஸி அவர்கள். "ஒழுக்கம் என்பது பெண்ணுக்கும் இருக்க வேண்டும், ஆணுக்கும் இருக்க வேண்டும். ஒரு குடும்பம், சமூகம், சுற்றி உள்ளவர்கள் ஒரு தனி மனிதனுக்கு என்ன போதிக்க வேண்டும் என்று சொல்லி, தன் கருத்துக்களைச் சுருங்கக் கூறி விளங்க வைத்துவிட்டார்.

இந்த நீயா நானாவில் தன் தெளிவான சீரிய கருத்துக்களுடன் தன் வாதத்தை முன்வைத்து பரிசு வென்ற தோழி விஜயலக்ஷ்மி அவர்களுக்கு பெண்மையின் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

Receipe of the Month

# Breakfast Recipes

# ஈசி ரவா தோசை

...Nisha Hameetha



**தேவையானப் பொருட்கள்:**

மைதா மாவு - 1 கப்
அரிசி மாவு - ¼ கப்
வறுத்த ரவா - 2 ½ கப்
பச்சை மிளகாய் - 3
இஞ்சி - சிறிய துண்டு
சீரகம் - 1 டீஸ்பூன்
முந்திரிப் பருப்பு - 50 கிராம்
எண்ணெய் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு

**செய்முறை:**

- பச்சை மிளகாயை பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
- இஞ்சியைத் துருவி கொள்ளவும்.
- முந்திரிப் பருப்பை நெய்யில் வறுத்து சிறிய சிறிய துண்டுகளாக ஒடித்துக் கொள்ளவும்.
- ஒரு பாத்திரத்தில் மைதா மாவு, அரிசி மாவு, ரவா, சீரகம், பொடித்த முந்திரி பருப்பு, உப்பு, துருவிய இஞ்சி, பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய் சேர்த்து, போதுமான அளவு தண்ணீர் விட்டு கட்டியில்லாமல் கரைக்கவும்.
- இந்த மாவுக் கலவையை அரை மணிநேரம் ஊற வைக்கவும்.
- தோசைக் கல்லை சூடாக்கி, எண்ணெய் விட்டு, கல்லின் ஓரத்தில் இருந்து உள்பக்கம் வரும் வகையில் மாவை ஊற்ற வேண்டும்.
- தோசையைச் சுற்றி எண்ணெய் விட்டு, முறுகலாக வெந்ததும் எடுக்கவும்.
- இதனைத் திருப்பிப் போடத் தேவையில்லை.
- இதற்குத் தொட்டுக்கொள்ள தேங்காய் சட்னி சிறந்த சைட் டிஷ்.



# Moong Dal Dosa

...Angu Aparna



**Ingredients:**

Split moong dal - 2 cup
Ginger - 1 inch piece
Green chillies - 3
Cumin seeds - 1 tsp
Asafoetida - a pinch
Coriander leaves - Finely chopped
Big onion - 2 finely chopped
Oil - As needed for making dosa
Salt - to taste.

**Method:**

- Clean and soak moong dal for 4 hours.
- Grind it with ginger, green chillies and salt. And keep the batter in vessel.
- The consistency of the batter may be neither thick nor thin.
- Add chopped onions, cumin seeds, asafoetida and finely chopped coriander leaves.
- Heat a nonstick dosa making tawa.
- Pour a ladle of the batter in the centre of the tawa and spread it out from the centre making dosa in round shapes.
- Drizzle a tsp of oil around the dosa.
- After it is cooked, flip it over to the other side. Wait for a few seconds till the other side is cooked, remove the dosa from tawa.
- Now hot moong dal dosa is ready to serve. Serve hot it with any chutney.
- Coriander chutney and tomato chutney goes well with moong dal dosa.



Receipe of the Month

# Aloo Poha

...Anbarasi



**Ingredients :**
Poha/Aval - 1 cup
Onion - 1 finely chopped
Ginger - 1 inch piece finely chopped
Green chillies - 1 finely chopped
Potato - 1
Turmeric powder - a pinch
Salt - to taste
Lemon juice -1 tbsp
Mustard -1 tsp
Curry leaves - a sprig

**Method:**

- Wash aval / poha under running water for 2-3 minutes and drain all the water. Keep it aside.
- Heat a tsp of oil in a pan, add mustard seeds, curry leaves and when mustard splutters, add onions and saute till it turns transparent.
- Then add ginger, green chillies, turmeric powder and saute for a few more seconds.
- Add cubed potatoes and cook till potatoes are done or you can add cubed boiled potatoes. Add salt to taste.
- Then add the poha to the above sauté for a minute.
- Add lemon juice and mix well. Garnish with coriander leaves and serve hot.
- Quick breakfast is ready in just 10 minutes.

**Tip:** Can also add fried ground nuts if required. Grated carrot can also be added for garnishing along with coriander leaves.



Receipe of the Month

# ஓட்ஸ் தோசை

...Nisha Hameetha



## தேவையான பொருட்கள்:

ஓட்ஸ் - 200 கிராம்
வெங்காயம் - 1
அரிசிமாவு - ½ கப்
புளித்த தயிர் - ¼ கப்
மிளகு சீரகப் பொடி - 1 டீஸ்பூன்
உப்பு - தேவையான அளவு
நெய் - சிறிதளவு
கருவேப்பிலை - சிறிதளவு
கொத்தமல்லித்தழை - சிறிதளவு

## செய்முறை:

- ஓட்ஸை 15 நிமிடம் சிறிதளவு தண்ணீர் சேர்த்து ஊற வைக்கவும். பின் அதை மிக்ஸியில் நன்றாக அரைக்கவும்.
- அரைத்த ஓட்ஸில் அரிசி மாவு, உப்பு சேர்த்து கலக்கவும்.
- வாணலியில் நெய்விட்டு மிளகு சீரகப் பொடி, பொடியாக நறுக்கிய வெங்காயம், கருவேப்பிலை சேர்த்து பொரித்து, இவற்றை கரைத்த மாவில் கொட்டவும்.
- பின் அதில் கொத்தமல்லித் தழை, புளித்த தயிரைச் சேர்த்து தோசை மாவு பதத்திற்குக் கரைக்கவும்.
- அடுப்பில் தோசைக்கல் வைத்துக் காய்ந்ததும், நெய் விட்டு, மெல்லிய தோசைகளாக வார்க்கவும்.
- இதற்கு வெங்காய சட்னி சிறந்த காம்பினேஷன்.



Oats, through their high fiber content help to remove the cholesterol from the digestive system and reduce the risk of heart disease. The Soluble fiber in Oats helps to remove the "bad" cholesterol.

By eating Oatmeal you can have some benefits like,
(a) Control your Weight.
(b) Reduce the risk for type 2 diabetes.
(c) Reduce high blood pressure.
(d) Reduce the risk of certain cancers.

# Oats Idli ...Sumitra



**Ingredients:**
Urad dal - ½ cup
Oats - 1 cup
Idly Rava - 1 cup
Salt - To taste

**Method:**
- First soak the urad dal in 1cup of water for about 5-6 hours.
- Then drain the water and blend both urad dal and Oats into a fine paste.
- Now transfer the batter into a vessel and add Idly Rava and salt to it. Check the consistency of the batter and add more water if needed.
- Leave the batter for one whole night to make the fermentation.
- Then next morning, steam cook the idly by pouring the ladle full of batter into the idly plates as you will cook the normal idly for about 10-15 minutes.
- Finally remove the idly and serve them with sambar/coconut chutney/ginger chutney/any chutney of your choice.

# Oatmeal Kanji ...Angu Aparna



**Ingredients:**
Quaker Oats - 1 cup
Skimmed milk - ¾ cup
Cinnamon - 1 pattai
Cardamom - 2 pods
Honey - 1 tsp

**Method**
- In a vessel, take oats and skimmed milk together.
- Add cinnamon, cardamom and honey.
- Let this keep in stove in medium flame, till oats are done.
- Now oats kanji is ready to serve.

You can use chopped fruits and vegetables for garnishing.

# Tips... Tips.....

**JV_66@Jayanthy**



இட்லி மிகவும் மெத்து மெத்து என்று மல்லிகை பூப்போல் இருக்க, ஊறவைக்கும் அரிசியோடு, ஒரு கைப்பிடி கெட்டி அவலும் சேர்த்து ஊற வைத்து அரைத்து இட்லி செய்தால் அவ்வளவு மிருதுவாக இருக்கும்.

**Nishahameetha**



To make a healthy chicken dish remove the skin from the chicken. This will remove the major fat content on the chicken.

To get crisp, golden dosa add a teaspoon of fenugreek seeds to the urad dal and grind it.



**Smahi**

உப்பு ஜாடியில் இரண்டு பச்சை மிளகாயைப் போட்டு வைத்தால் உப்பு நீர்த்துப் போகாது.

வெண்டைக்காயின் காம்புகளையும், தலைப்பாகத்தையும் நறுக்கி விட்டு வைத்தால் மறுநாள் சமைப்பதற்குள் முற்றிப் போகாமல் இருக்கும்.

**Akshu Anitha**



ரவா லட்டு செய்யும் போது வெறும் வாணலியில் ரவையை நன்கு வறுத்து, அதே அளவு சர்க்கரையை எடுத்து இரண்டையும் தனித்தனியே மாவாக அரைத்துப் பிடித்தால் சுவையாக இருக்கும். ரவை அளவுக்கே நெய்யையும் சேர்க்கவும்.



**Gokila**

பயறை வேகவைக்கும் போது, 1 டீஸ்பூன் சர்க்கரை சேர்த்து வேகவிட்டால் சீக்கிரம் வெந்துவிடும்.

Penmai's Kitchen Queen

# மீன் கட்லெட்

...Saravanakumari

**தேவையானப் பொருட்கள்:**

சதை அதிகமுள்ள மீன் - ½ கிலோ
பெரிய வெங்காயம் - ¼ கிலோ (பொடியாக நறுக்கியது)
முட்டை - 1
பிரட் தூள் - தேவையானது
இஞ்சி, பூண்டு விழுது - 1 டேபிள் ஸ்பூன்
எலுமிச்சை சாறு - 1 டேபிள் ஸ்பூன்
மிளகாய் தூள் - 1 டீஸ்பூன்
மிளகு தூள் - ½ டீஸ்பூன்
மஞ்சள் தூள் - 1 டீஸ்பூன்
கொத்தமல்லி இலை - 1 (சிறிய கட்டு)
பச்சை மிளகாய் - 6
எண்ணெய் - பொரிக்க
உப்பு - தேவையான அளவு

**செய்முறை:**

- மீனில் மஞ்சள் தூள் சேர்த்து வேக விட்டு, முள், தோல் நீக்கி தூளாக்கிக் கொள்ளவும்.
- இதில் மிளகாய் தூள், உப்பு சேர்த்து நன்கு கலக்கவும்.
- வாணலியில் சிறிது எண்ணெய் ஊற்றி அதில் இஞ்சி, பூண்டு விழுது சேர்த்து வதக்கியதும், வெங்காயம், பச்சை மிளகாய் சேர்த்து வதக்கி இறக்கவும்.
- இதில் மீன் கலவையைச் சேர்த்து எலுமிச்சைச்சாறு ஊற்றி கலக்கி நீளவாக்கில் உருண்டை பிடித்துக் கொள்ளவும்.
- பின்பு ஒரு சிறிய கிண்ணத்தில் முட்டை ஊற்றி அதில் உப்பு, மிளகுத் தூள் சேர்த்து நன்கு கலக்கவும்.
- இதில் உருண்டைகளை நனைத்து பின் பிரட் தூளில் பிரட்டி எண்ணெயில் பொன் நிறமாக பொரித்து எடுக்கவும்.
- சுவையான மீன் கட்லெட் ரெடி.



Penmai's Kitchen Queen

# Kothamalli Thuvaiyal

...Rudhraa



**Ingredients:**

Coriander (Kothamalli) - 1 bunch
Coconut - ½ Shell
Urad dal - 2 tsp
Bengal gram dal - 2 tsp
Red chillies - 3
Salt - to taste
Oil - 3 tsp
Curry leaves - a sprig
Mustard seeds - 1 tsp

**Method:**

- Chop the coriander and coconut in to fine pieces.
- Heat the pan. Add 1 tsp of oil and fry urad dal and Bengal gram dal.
- Now add red chillies to the pan and fry for 10 secs and keep aside.
- Now saute the chopped coriander leaves for 2 mins.
- Now put the fried grams alone in a mixer jar and grind it after that add the coriander leaves to the mixer jar.
- Now add chopped coconut to it. Grind it to a fine paste.
- Heat oil in a pan, add mustard seeds, when it pops add curry leaves and add it to the thuvaiyal.
- Yummy Kothamalli thuvaiyal is ready.













Goes well with sambar and rasam satham. Can also mix with hot rice and eat.

# வறுத்து – அரைத்த கோழிக்குழம்பு

...Smahi @ Maheswari



**தேவையானப் பொருட்கள்:**
கோழிக்கறி (எலும்புடன்) - 1 கிலோ
மஞ்சள் தூள் - ¼ டீஸ்பூன்
உப்பு - தேவையான அளவு

**வறுத்து அரைக்கத் தேவையான பொருட்கள்:**
சின்ன வெங்காயம் - 100 கிராம்
பூண்டு - 1
இஞ்சி - 1 இன்ச் துண்டு
மிளகு - 1 டீஸ்பூன்
சோம்பு - 1 டீஸ்பூன்
தனியா - 1 டேபிள் ஸ்பூன்
காய்ந்த மிளகாய் - காரத்திற்கேற்ப
பட்டை - சிறிய துண்டு
கிராம்பு - 4 (அ) 5
கசகசா - 1 டீஸ்பூன்
தேங்காய் துருவல் - 5 டேபிள் ஸ்பூன்
கொத்தமல்லித் தழை - சிறிதளவு
எண்ணெய் (வதக்குவதற்கு) - 1 டேபிள் ஸ்பூன்

**தாளிக்க:**
எண்ணெய் - 5 டேபிள் ஸ்பூன்
சோம்புப் பொடி - 1/2 டீஸ்பூன்
பூண்டு - 4 பல் (நசுக்கியது)
தக்காளிப் பழம் - 1 ( பொடியாக நறுக்கியது)
கறிவேப்பில்லை - சிறிதளவு

**செய்முறை:**
- முதலில் கோழித் துண்டுகளை மஞ்சள் தூள் போட்டு நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.
- அடுப்பில் வாணலியை வைத்து, ஒரு டேபிள் ஸ்பூன் எண்ணெய் விட்டு, வறுத்து அரைக்கக் கொடுத்துள்ள பொருட்களைப் போட்டு, கடைசியில் தேங்காய் பூவையும் சேர்த்து ஒரு நிமிடம் வதக்கி, அடுப்பை அணைத்து ஆறியதும் மிக்ஸியில் போட்டுச் சிறிது கொத்தமல்லி தழையையும் சேர்த்து மைய அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.
- ஒரு பாத்திரத்தில் சுத்தம் செய்த கோழித் துண்டுகள், அரைத்த மசாலாப் போட்டு, உப்பையும் சேர்த்து நன்றாக வேக வைக்க வேண்டும்.
- கோழி மசாலாவுடன் சேர்ந்து நன்றாக வெந்ததும், மீண்டும் அடுப்பில் வாணலியை வைத்து தாளிக்கக் கொடுத்துள்ள பொருட்களை ஒவ்வொன்றாகச் சேர்த்து நன்றாக வதங்கியதும், கொதித்த குழம்பில் சேர்த்து, பொடியாக நறுக்கிய கொத்தமல்லி தழையையும் சேர்த்து, ஒரு கொதி வந்ததும் அடுப்பை அணைத்து விட வேண்டும்.
- சுவையான வறுத்து அரைத்தக் கோழிக் குழம்பு தயார். சூடான சாதம், பரோட்டாவுடன் சேர்த்து சாப்பிட சுவையோ சுவை.

# பெண்மை கவிக்குயில்கள்

Lashmi

என் மகளால் மட்டுமே
முடிகிறது...
தோழியாய் சகோதரியாய்
பாட்டியாய்...
சில நேரங்களில் என் தாயாய்...
பல நேரங்களில் என் மாமியாராய்
பல முகங்களைக் காட்ட...!!!

## மரங்கொத்தி நினைவுகள்

Anupriya86

உயிர்ப்பித்தாயே உயிர்த்தாயே
உயிர்த்தாயே என் உயிர் தாயாய்
உடையா கூட்டினில்
கூட்டுப் புழுவாய்
இனிப்பாய் உவப்பாய் துவர்ப்பாய்
கசப்புமாய் நீ இருந்தாய்
இறக்கை முளைக்கா முல்லை அருவம்
முள்ளை அறியா விடலைப் பருவம்
விட்டு சிறகடிக்க மனம் முட்டமுட்ட
இதோ தெரியுது வானம் - ஐயகோ
வெட்ட வெளி கண்ணைக் கூசுதே
எங்கே எனது கூடு
கண்கள் கூச மெய்கள் கெஞ்ச
முளையா சிறகை முயன்று இழுக்க...
காலனும் கடந்தான்...
காலமும் கடந்தது!
மனிதம் குறைந்த காட்டில்
மனிதப் பறவையாய் நான்
இதம் மறந்து சுகம் மறந்து
மனம் மறந்து கூடும் மறந்து...
மறந்து விட்டேன் தான்
ஆம் - மரத்து விட்டேன் நான்...
ஆயினும்
மரங்கொத்தி பறவையாய்
உன் நினைவுகள்...!!!

## மழைக்காலமும்... இல்லறமும்...

Gomathy Arun

மகரந்தம் கலந்த தென்றல்...
மோகம் கலந்த காதல்!!!
ஈரம் கலந்த காற்று...
காதல் கலந்த பார்வை!!!
செவியைக் கிழிக்கும் இடி...
சிறு சிறு சண்டைகள்!!!
பார்வையைக் கெடுக்கும் மின்னல்...
மனத்தைக் கெடுக்கும்
மனஸ்தாபங்கள்!!!
இடிக்குப் பின் சாரல்...
ஊடலுக்கு பின் கூடல்!!!
மழைத்துளியில் மறையும் கறைகள்...
அன்பில் கரையும் தவறுகள்!!!
மழையில் மாசில்லா இலைகள்...
கள்ளம் கபடமில்லா உள்ளங்கள்!!!
மணம் வீசும் மண்வாசனை...
இன்பம் வீசும் காதல்வாசனை!!!
ஆற்றின் வெள்ளப் பெருக்கு...
உள்ளத்தின் மகிழ்ச்சிப் பெருக்கு!!!
பூமிக்கு அழகு மழை...
இல்லறத்திற்கு அழகு காதல்!!!

Saranya Raj

பெண்ணே...
நீ என்ன மாயவலையா...!
ஒரு முறை உன்னை பார்த்தேன்...
மீள முடியா சுழலில் சிக்கியது போல்
மனம் அலைபாய்கிறதே...!
இருந்தும் மனமதை ரசிக்கிறதே...!
விந்தையிலும் விந்தை...!!!

## நட்பு

உறைந்து போன
ரத்த நாளங்களையும்
உயிர்த்திடும்
உயிர்த் துடிப்பு.

- Poovizhi

கதைப் பகுதி
சிறுகதை...

# மனிதம்

...breezy@Prana

என்னால் நம்பவே முடியவில்லை. எப்படி இது சாத்தியம்? நேற்று கூட மாமியார் வீட்டிற்குச் சென்றபோது லட்சுமியம்மாவை பார்த்தேனே... நன்றாகத்தானே இருந்தார். அதற்குள் என்னாவாகி இருக்கும்? நினைத்துப் பார்க்கையில் அதிர்ச்சியாக இருந்தது. என்ன ஒரு நிச்சயமற்ற வாழ்க்கை! அடுத்த நொடி நடக்கப் போகும் அதிசயங்கள் சொல்லி மாளாது. வினு அதற்குள் மறுபடி என்னை செல்லில் அழைத்தார்.

"யமுனா, கிளம்பிட்டியா, சீக்கிரம் போ.. நான் ஆபிஸ்ல இருந்து கிளம்பிட்டேன்... பத்து நிமிஷத்துல வந்துடுவேன்". அவர் குரலில் பதட்டம் இருந்தது.

"ஏன் வினு என்ன ஆச்சு? நேத்து நல்லாத்தான இருந்தாங்க... எனக்கு ஒன்னுமே புரியலையே".

"நெஞ்சு வலியாம்... திடீர்னு தான்... ஹாஸ்பிட்டலுக்கு போன் பண்றதுக்குள்ளயே உயிர் போய்டுச்சு. சரி நீ முதல்ல கிளம்பு." அவசரமாக போனை அணைத்தார்.

வீட்டைப் பூட்டிவிட்டு வெளியில் இறங்கி நடக்க ஆரம்பித்தேன். பத்து நிமிட நடையில் மாமியார் வீட்டை அடைந்து விடலாம்.

லட்சுமியம்மா வினோத்தின் அத்தை... அதாவது என் மாமனாரின் அக்கா. மாமனாருக்கு ஒரு அக்கா, ஒரு தம்பி. வினுவின் வீட்டில் எல்லோருமே படிக்காதவர்கள். இந்தத் தலைமுறை தான் முதல் முறையாக கல்லூரி வாசலை எட்டியுள்ளது. அதுவும் லட்சுமியம்மாவின் புண்ணியத்தால்.

பதினைந்து வயதில் திருமணம் முடிந்து, ஒரு வருடத்திலேயே கணவனை இழந்தவள். தன் தம்பிகள் இருவரையும் வளர்த்து ஆளாக்கியது மட்டும் அல்லாமல் அவர்கள் குழந்தைகளையும் நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறாள். இத்தனைக்கும் ஒன்றும் படிக்காதவள். தன் உழைப்பு ஒன்றே மூலதனமாய் கொண்டவள். ஆரம்பித்தில் ஏதேதோ வேலை செய்தவள், வெங்காய வியாபாரம் ஆரம்பித்து, வியாபாரத்தின் நெளிவு சுளிவு கற்றாள். அன்றிலிருந்து ஏறுமுகம் தான். சொந்தமாக வீடு கட்டும் அளவுக்கு. இப்போது என் மாமியார் இருக்கும் வீடு அவர் கட்டியதுதான். அதே வீட்டில் பின் கட்டில் தனியே வசித்து வந்தார்.

இள வயது தனிமையோ, தனக்கு யாரும் இல்லையென்ற உணர்வோ, எது என்று தெரியவில்லை. அவருக்குள்ளே ஒரு வட்டம் போட்டுக்கொண்டு வாழ்ந்தார். யாருடனும் அன்பாக பேசுவது இல்லை. எப்போதும் ஒரு சிடு சிடுப்பு. பத்தாததற்கு அவருடைய வெங்காய வியாபாரம் கற்றுக் கொடுத்த கெட்ட வார்த்தைகள் வேறு. இவை போதாதா நம் மக்களுக்கு? பத்தரமாற்று தங்கமாக இருந்தாலே உரசுவார்கள். அதில் சில குறைகள் கண்ணுக்கு தென்பட்டாள்... கேட்கவே வேண்டாம். அந்த குடும்பத்திலும் சரி, அந்த தெருவிலும் சரி, லட்சுமியம்மாவிற்கு நல்ல பெயர் இல்லை. நேரில் பல் இளிப்பவர்கள் முகத்திற்கு பின்னால் முகம் சுளித்தார்கள்.

கல்யாணம் முடிந்து வீட்டிற்கு வந்ததும் வினோத் என்னிடம் சொன்ன முதல் வார்த்தைகள் எனக்கு இன்னும் நினைவில் இருக்கிறது. "யமுனா, என் அத்தை தான் இந்த குடும்பத்தின் ஆணி வேர். அவர் இல்லாவிட்டால் நாங்கள் இந்த அளவுக்கு வந்திருக்க முடியாது. உன் மாமனார், மாமியாருக்கு இருந்த சுதாரிப்புக்கு நாங்கள் நடுத்தெருவில் தான் இருந்திருக்கணும். ஆனால் பார்த்தீனா, அத்தைய பத்தி எக்குத் தப்பா பேசுவாங்க... நீ ஏதும் காதுல வாங்கிக்காத. அதுக்காக அத்தைக்கிட்ட நல்லா ஒட்டிக்கோணு சொல்லல... ஏன்னா அவங்களுக்கு அதெல்லாம் பிடிக்காது. சோ, நீ உண்டு உன் வேலை உண்டுனு இரு".

அடுத்த நாள் என் மாமியார் சொன்னார்,

கதைப் பகுதி
சிறுகதை...

**முதுகிற்குப் பின்னால் பேசத் தெரியாது. எதுவாக இருந்தாலும் நேருக்கு நேர் கேட்டு விடுவார். அதுதான் அவருக்கு அரக்கிப் பட்டத்தை வாங்கி கொடுத்தது.**

"யமுனா, வினுவோட அத்தை ஒரு மாதிரி அதனால பார்த்து நடந்துக்கோ... சரியான பஜாரி அது... அதனால அதுகிட்டல்லாம் ஒண்ணும் வச்சுக்காத.."
ரெண்டு பேரும் ஒரே விஷயம் தான் சொன்னார்கள். ஆனால் இருவர் சொன்ன விதமும் வித்தியாசமாக இருந்தது. ஆனால் வந்த ஒரே மாதத்தில் அவரை நான் நன்றாக புரிந்து கொண்டேன்.

நேர்மையான மனுஷி, முதுகிற்குப் பின்னால் பேசத் தெரியாது. எதுவாக இருந்தாலும் நேருக்கு நேர் கேட்டு விடுவார். அதுதான் அவருக்கு அரக்கிப் பட்டத்தை வாங்கி கொடுத்துள்ளது.

இதை எல்லாம் எண்ணிக்கொண்டு வந்தவள் வீட்டை அடைந்ததும் வேக வேகமாக அவர் அறைக்குச் சென்று பார்த்தேன்.

மாமியாரும், சின்ன மாமியாரும் நின்றிருந்தார்கள் கதை பேசிக்கொண்டு. லட்சுமியம்மா கட்டிலில் தூங்குவது போல் இருந்தது. நான் சென்றதும் மாமியார் அருகில் வந்து என்னிடம் ஒரு அட்டையை கொடுத்தார்.

"யமுனா, இது என்னானு கொஞ்சம் பாரு, நெஞ்சு வலின்னு மார புடிச்சுட்டு உக்காந்துருச்சு, நாங்க போன் பண்ணலானு போறோம்... அதுக்குள்ள பீரோவத் திறக்கச் சொல்லி இத எடுக்கச் சொல்லிட்டு அப்படியே படுத்திருச்சு... அவ்ளோ தான் உயிர் போய்டுச்சு. இது என்ன அட்டை?" மாமியார் ஆர்வமாக என்னிடம் கேட்டார் எதாவது பண விஷயமாக இருக்கும் என்று.

அட்டையை வாங்கிப் பார்த்தவள் அதிர்ந்து போய்விட்டேன். என்னையும் அறியாமல் என் கண்களில் இருந்து கண்ணீர் வர ஆரம்பித்தது. என்ன மாதிரியான மனுஷி இவள்! என் இதயத்தை யாரோ அழுத்திப் பிடிப்பது போல் இருந்தது.

"என்ன யமுனா, அட என்ன இது சொல்லு..." சின்ன மாமியாரின் அவசரம்...

"கண் தானம் செய்வதற்கான அடையாள அட்டை இது" மிகச் சிரமப்பட்டு பேசினேன்.

"கண் தானமா, இது இந்த வேலையெல்லாம் செஞ்சு வச்சுருக்கா...? வேற வேலை இல்ல, ஆஸ்பத்திரிக்கெல்லாம் தூக்கிட்டு போய்ட்டு, முகம் எல்லாம் விகாரம் ஆய்டும், அதெல்லாம் ஒண்ணும் வேணாம்..." என் மாமியார் ஆறாவது அறிவை கடன் கொடுத்துவிட்டு பேசிக்கொண்டிருந்தார். என்ன ஜென்மங்கள் இவை! எனக்கு கோபம் தலைக்கு ஏறியது.

"நாம ஆஸ்பிட்டல் எல்லாம் போக வேணாம், போன் பண்ணுனா அவங்களே வருவாங்க, ஒரு இருபது நிமிஷம் தான் ஆகும் இந்த ஆபிரேஷனுக்கு. கரு விழி மட்டும் தான் எடுப்பாங்க... அதனால முகம் எல்லாம் விகாரம் ஆகாது. எப்போதும் போலத்தான் இருக்கும். அந்த வலில கூட நினைவா இதை எடுத்து குடுத்திருக்காங்க, அவங்க கண்ண தானம் செய்யாட்டா அவங்க ஆத்மா சாந்தி அடையாது. நீங்க கொஞ்சம் பேசாம இருங்க" கோபத்தினூடே பேசினேன்.

கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்துக்கொண்டே அந்த தேவதையைப் பார்த்தேன். இறக்கும் வரையும், இறந்த பின்பும் கூட மற்றவர்களுக்காகவே வாழ்ந்த நல்ல ஆத்மா... படித்தவர்கள் சாதிக்காததை; சாதித்த மேதை!!!. மனதார வணங்கி நின்றேன்.

தொடர் கதை...

# கனவே கலையாதே

- திருமதி.சுகந்திரமேஷ்...

## 5

என்னடி இவ்ளோ லேட்டா வர்றே... மகளின் கையில் இருந்த புடவை பார்சலும், கழுத்தில் மின்னிய புதிய தங்கச் சங்கிலியும் மீனாட்சியின் கண்களுக்கு தப்பவில்லை... என்ன ஷாப்பிங் போயிட்டு வர்றியா...? என்று அவளே குட்டையை குழப்பி விட...

ஆமாம்மா... பார்ட்டி எட்டு மணிக்கே முடிஞ்சது... சரி வீட்ல வந்து சும்மா தான இருக்க போறோம்ன்னு அப்படியே ஜவுளிக்கடை, நகைக்கடைன்னு ஏறி இறங்கிட்டு வந்தேன்... அப்பா சம்பாதிக்கறது எல்லாம் வேற யார் செலவு பண்றதாம்.... ரித்திகா சமாளிக்க...

அவள ஏன் கூண்டுல ஏத்தி குறுக்கு விசாரண பண்ணிக்கிட்டு இருக்கே மீனாட்ஷி... அவளே டயர்டா வந்திருக்கா... நீ போடா செல்லம்... போய் ட்ரஸ் மாத்திட்டு தூங்கு... செல்வராஜன் அவளை அனுப்பி வைக்க...

விட்டால் போதும் என்று தன் அறைக்கு விரைந்தாள் ரித்திகா.

மறுநாள்... மீனாட்ஷி... அஞ்சனா வினோத் குடும்பத்தோடு மூணார் புறப்பட்டு சென்றுவிட... ஆபீசுக்கு லீவ் போட்டிருந்தாள் ரித்திகா.

முட்டை தோசை ரெடி செய்து டைனிங் டேபிளில் வைத்தவள்...
அப்பா... சாப்பிட வர்றீங்களா...? உங்களுக்கு பேக்டரிக்கு லேட் ஆகல...? என்று குரல் கொடுக்க...

இதோ வந்துட்டேன்டா செல்லம்... இன்னைக்கு இதெல்லாம் உன்னோட ட்யூட்டியா... நீயும் மூணார் போயிருக்கலாமே ரிதும்மா... இங்க உக்காந்து இந்த வேலை எல்லாம் இழுத்துப் போட்டு செய்யலேன்னா என்ன...?

செல்வராஜனுக்கு தன் மகள் மகாராணியைப் போல இருக்க வேண்டும் என்று எண்ணம்.

நான் உங்ககிட்ட தனியா பேசணும் பா... இது என் வாழ்க்கைய தீர்மானிக்க போற விஷயம்... டூர் அவாய்ட் பண்ணதே உங்ககிட்ட இது பத்தி பேசத்தான்... ரித்திகா சொல்ல...

என்னடா ரிதும்மா... ரொம்ப சீரியஸா பேசறடா... நான் உன்ன இன்னும் சின்ன பொண்ணாத் தான் நினைச்சுக்கிட்டு இருந்தேன்... என்னன்னு சொல்லுடா... அப்பா இருக்கேன்... செல்வராஜன் கவலையாய் கேட்க...

நீங்க முதல்ல சாப்பிடுங்க பா... அப்புறம் பேசுவோம்...

நீ என்ன விஷயம்னு சொல்லும்மா... என்னன்னு தெரியாம எனக்கு ஒரு வாய் கூட உள்ள இறங்காது... டம்ளரில் இருந்த தண்ணீரை அவசரமாகக் குடித்தார் செல்வராஜன்.

விஷ்வா யார் என்பதையும், தனக்கும் விஷ்வாவுக்கும் ஏற்பட்ட காதலையும் சுற்றி வளைக்காமல் பளிச்சென்று சொன்னாள் ரித்திகா... செல்வராஜனின் முகக் குறிப்பு எதையும் உணர்த்துவதாக இல்லை.

ரிதும்மா... உன் அம்மா உன்ன NRI க்கு கட்டிக் குடுங்கன்னு சொன்னப்போ நான் என்ன சொன்னேன்... நீ முதல்ல ஆடிட்டர் ஆகணும்... அதுக்கு அப்புறம் தான் எல்லாமேன்னு சொன்னேனா இல்லையா...? நான் எவ்ளோ பெரிய இடத்துல உனக்கு மாப்பிள்ளை பாக்கணும்ம்னு நினைச்சிருக்கேண்டா... செல்வராஜன் சொல்ல...

இதுனால என்னோட ஆடிட்டர் வேலை ஒண்ணும் கெட்டுப் போகப் போறதில்ல பா... இன்னும் கொஞ்சம் இன்ட்ரஸ்ட் எடுத்து என்னால ப்ராக்டிஸ் பண்ண முடியும்... வசதில இவங்களும் குறைஞ்சு போயிடலப்பா... சொந்த பங்களா, சொந்த கார்னு நம்ம வீட்ல என்ன என்ன இருக்கோ, எல்லாமே அவங்க கிட்டயும் இருக்கு... பணத்துக்கும் பணத்துக்கும் கல்யாணம்

நடக்கணுமா... இல்ல மனசுக்கும், மனசுக்கும் ஜோடி சேர்க்கணுமான்னு நீங்களே முடிவு பண்ணுங்க... மனசுல விஷ்வாவ வெச்சிகிட்டு நீங்க சொல்ற பெரிய இடத்துல வாழ்க்கைப்பட்டு, வேற ஒருத்தனோட என் உடம்ப மட்டும் பங்கு போட நான் தயாரா இல்லப்பா... IPCC ரிசல்ட் வந்ததும் கேட்டீங்களே... உனக்கு என்ன வேணுமோ சொல்லுடா... கொண்டு வந்து கொட்டறேன்னு... எனக்கு விஷ்வா தான் பா வேணும்... தீர்மானமாகச் சொன்னாள் ரித்திகா.

சொல்லிவிட்டு அவர் பதிலை எதிர் பார்க்காமல் சமையல் அறைக்குள் சென்றாள் ரித்திகா... இரண்டு கோப்பைகளில் சுடச் சுட காபி கலந்து கொண்டு வந்தவள்...

டிபன் சாப்பிட்டதும் கையோட காபி கேப்பிங்கன்னு அம்மா சொல்லிட்டு தான் போனாங்க... அவர் அருகே காபியை வைத்துவிட்டு தன் அறைக்கு சென்று கதவை தாழிட்டாள் ரித்திகா... மனம் படபடவென்று அடித்துக் கொண்டது... இதுவரை செல்வராஜனிடம் எதற்காகவும் வாதிடும் சூழ்நிலை நேர்ந்ததில்லை... விஷ்வாவிடம் பேச வேண்டும் போல் இருந்தது... கால் செய்தாள்.

இப்போ தான் ஆபீஸ்ல என்டர் ஆயிட்டு இருக்கேன்... இன்னும் கொஞ்ச நேரத்துல பிஸி ஆயிடுவேன்... என்ன விஷயம் ரிது....?

அப்பா கிட்ட எல்லாமே சொல்லிட்டேன் விஷ்வா...

ம்ம்... என்ன சொன்னார்...?

அவரோட ரியாக்ஷன் இன்னும் சரியா தெரியல விஷ்வா... அமைதியா கேட்டுகிட்டார்... எனக்கு தான் ரொம்ப படபடப்பா இருந்தது... அதுதான் போன் பண்ணேன் விஷ்வா...

ரைட்... அவரோட ஒபீனியன் தெரிஞ்ச பிறகு மேற்கொண்டு என்ன செய்யறதுன்னு யோசிக்கலாம்... ஐ ஆம் ஆல்வேஸ் தெர் பார் யூ... இன்னைக்கு ஆபீஸ்க்கு மட்டம்னு அண்ணா சொன்னாரே... வொய்...?

ஹூம்... ஐ வான்ட் டு டேக் ரெஸ்ட் அண்ட் கோ இன் டு ஸ்வீட் ட்ரீம்ஸ்... தி ஹோல் டே...

கேரி ஆன் ஹனி... பை... சிரித்துக் கொண்டே தொடர்பை துண்டித்தான் விஷ்வா...

அன்று பகல் பதினோரு மணி அளவில் செல்வராஜன் ஸ்ரீதரனிடம் பேசிக்கொண்டு இருந்தார்... சற்று நேர உரையாடலுக்கு பின் இருவரும் புறப்பட்டு விஷ்வாவின் வங்கிக்கு சென்றனர்... ரித்திகா மதியத்திற்கு அரிசி களைந்து எலக்ட்ரிக் குக்கரில் வைத்துவிட்டு கொத்தவரை பருப்புக் கூட்டும், முருங்கைக்காய் சாம்பாரும் செய்து கொண்டிருந்தாள்... காதில் இருந்த வாக்மேன் ஸ்ரேயா கோஷலை ஒலித்துக் கொண்டு இருக்க... செல் ரிங்கானது ரிதிகாவுக்கு கேட்காமலே போனது... சமையல் முடிந்து எல்லாம் டைனிங் டேபிளில் அழகாக வைத்துவிட்டு அக்கடா என்று ஹால் சோபாவில் அமர்ந்து டிவியை ஆன் செய்தாள்... இப்போது லான்ட்லைன் அலற அவசரமாக சென்று எடுத்தாள் ரித்திகா...

எத்தன தடவ போன் பண்றது ரிதுமா... மதியம் லன்ச் ரெடி பண்ணிட்டியா...? செல்வராஜன் அதிகாரமாய் கேட்க...

பண்ணிட்டேன் பா... எப்போ வேணா நீங்க சாப்பிட வரலாம்... ரித்திகா அமைதியாய் பதில் சொன்னாள்...

நான் மட்டும் வரலேம்மா... உன்ன கட்டிக்க போற மாப்பிள்ளை பையனும் சேர்ந்து தான் வர்றாரு... அவருக்கும் சேர்த்து லன்ச் ரெடி பண்ணு... இனிமே உன் இஷ்டத்துக்கு எல்லாம் நான் விடறதா இல்ல... நான் என்ன சொல்றேனோ அதுதான் நீ கேக்கணும்... இன்னும் ஒரு மணி நேரத்துல அங்க இருப்போம்... அதுக்குள்ளே மாப்பிள்ளைய வரவேற்க தயாரா இரு... செல்வராஜனின் கட்டளை ரிதிகாவுக்கு விநோதமாக இருந்தது...

அப்பா... நான் அவ்ளோ தூரம் விஷ்வா பத்தி சொல்லியும் என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க...? என்னால வேற எவனையும் வரவேற்க முடியாது... நீங்க யார வேணா கூட்டிட்டு வாங்க... ஐ டோன்ட் கேர்... கோபமாக பதில் சொல்லி ரிசீவரை டொக்கென்று வைத்தாள் ரித்திகா...

மாப்பிள்ளை பையனாமே... வரட்டும் ஓட ஓட விரட்டி அடிக்கிறேன்... சாம்பாரில் ஒரு டப்பா மிளகாய்ப் பொடியை அள்ளிக் கொட்டி பரிமாறினால் உச்சிமுடி நட்டுக் கொண்டு தன்னால் ஓடப்போகிறான்... ஹூம்... காளி அவதாரம் எடுத்தவள் போல உட்கார்ந்திருந்தாள் ரித்திகா...
ஒரு மணி நேரம் கழித்து வாசலில் ஹாரன் சத்தம் கேட்டது... அவசரமாக எழுந்து சமையல் அறைக்கு சென்றாள் ரித்திகா... மாப்பிள்ளை பையனுக்கு பரிமாறுவதற்கு என்றே ஒரு கிண்ணத்தில் சாம்பாரை தனியாக எடுத்து மிளகாய்ப் பொடியை அள்ளிக் கொட்டிக் கலக்கினாள்... அதற்குள் செல்வராஜனின் குரல் கேட்க...

ரிதும்மா... மாப்பிள்ளை வந்திருக்காரு பாரு... வந்து வாங்கன்னு கூப்பிடு...

எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது... யார் அந்த பிருகஸ்பதி என்று ஆத்திரத்தோடு ஹாலுக்கு வர அங்கே செல்வராஜனிடம் பேசிக் கொண்டிருந்தது அவள் இதயம் கவர்ந்த விஷ்வா... விழிகள் விரிய அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள் ரித்திகா...

என்னம்மா அப்படி பாக்கறே...? இவர் தான் உனக்காக நான் பாத்திருக்கிற மாப்பிள்ளை பையன்... பிடிச்சிருக்கா இல்லையான்னு அவர் கிட்டயே சொல்லிடு... செல்வராஜன் தன் பெண்ணை சீண்டிப் பார்க்க...

அப்பா... என்று ஓடிப்போய் அவரை கட்டிக் கொண்டாள்... மகளின் தலையை ஆதரவாய் வருடிக் கொடுத்தார் செல்வராஜன்...

உன் சந்தோஷம் தாண்டா எனக்கு முக்கியம்... மாப்பிள்ளை கிட்ட பேசிட்டு இரு... வந்திடறேன்... என்று அவர்கள் இருவரையும் தனியாக இருக்கவிட்டு உள்ளே சென்றார்..

என்ன விஷ்வா... எப்படி இதெல்லாம்... எனக்கு ஒண்ணுமே புரியல... ரித்திகா விஷ்வாவைக் கேட்க...

செல்வராஜனும் ஸ்ரீதரனும் ஒருவரை ஒருவர் சந்தித்து பேசியதையும், பின்னர் இருவரும் சேர்ந்து வங்கிக்கே வந்து தன்னிடம் பேசியதையும்... வீட்டுக்கு உடனே வரவேண்டும் என்று வற்புறுத்தியதால் பேங்க் மேனேஜரிடம் ஸ்பெஷல் பெர்மிஷன் கேட்டு வந்ததாகவும் அவன் தெரிவித்துக் கொண்டிருந்தபோதே சமையல் கட்டில் இருந்து ஆஆஆ என்று செல்வராஜன் அலறும் சத்தம் கேட்டது...
ஐயோ அப்பா... என்று அரண்டு போய் உள்ளே ஓடினாள் ரித்திகா... விஷ்வாவும் அதே வேகத்தில் பின் தொடர்ந்தான்... அவசரமாக ஐஸ் வாட்டரை மடமடவென்று குடித்துக் கொண்டு இருந்தார் செல்வராஜன்...

என்னப்பா ஆச்சு...? ஏன் கத்துனிங்க...? முகத்தில் கலவரத்துடன் ரித்திகா கேட்க...

என்னம்மா... சாம்பார்ல இவ்ளோ காரம் அள்ளிப் போட்டிருக்கே... மாப்பிள்ளைக்கு பரிமாறதாச்சே... டேஸ்ட் பண்ணி பாத்துருவோம்னு ஒரு ஸ்பூன் தான் வாய்ல வெச்சேன்... வாயெல்லாம் எரியுது... அளவு தெரியாம போட்டுட்டியா என்ன...? மீண்டும் அவர் தண்ணீரை மடக் மடக் என்று குடிக்க...

இத ஏன்பா வாய்ல வெச்சீங்க...? இது அவருக்காக கலந்து வெச்சது பா...

ஐயோ... என்று விஷ்வாவும் சேர்ந்து அலற...

ஐயோ விஷ்வா... நான் உங்கள சொல்லல... அப்பா போன்ல மொட்டையா மாப்பிள்ளை பையன்னு சொன்னாரு... நான் யாரையோ கூட்டிட்டு வந்து கல்யாணத்துக்கு என்ன கட்டாயப் படுத்தப்போறாருன்னு நினைச்சேன்... அவன ஓட ஓட விரட்டணும்னு தான்... தனியா சாம்பார்ல... அசடு வழிந்து கொண்டு இருந்தாள் ரித்திகா...

அவள் சொன்னதைக் கேட்டு செல்வராஜனும், விஷ்வாவும் விழுந்து விழுந்து சிரிக்க.... ரித்திகா அவசரமாக அந்த மிளகாய்ப்பொடி சாம்பாரை எடுத்து சின்க்கில் கொட்டினாள்...

பாத்து கேர்புல்லா இருங்க மாப்பிள்ளை... கல்யாணத்துக்கு அப்புறம் அவ ஏதாவது கேட்டு நீங்க மாட்டேன்னு சொன்னா இதே கதி தான் உங்களுக்கும் என்று செல்வராஜன் சீண்டிக் கொண்டிருக்க...

நீங்க ரெண்டு பேரும் மொதல்ல டைனிங் டேபிளுக்குப் போங்க... என்று விரட்டிக் கொண்டு இருந்தாள் ரித்திகா...

ஒரு வழியாக அவள் பரிமாற செல்வராஜனும், விஷ்வாவும் இடைஇடையே அவளை வம்புக்கு இழுத்தபடி சாப்பிட்டு முடித்தனர்...

இப்பவுமே எனக்கு அவ ஒரு குழந்தை தான் மாப்பிள்ளை... நீங்களும் அவள சந்தோஷமா வெச்சிக்கோங்க... எனக்கு அது போதும்... மீனாட்ஷி ஊர்ல இருந்து வந்ததும் கலந்து பேசிட்டு மத்த விஷயமெல்லாம் முடிவு பண்ணிக்கலாம்... நான் மாப்பிள்ளைய ஆபீஸ்ல விட்டுட்டு வரேண்டா ரிதுமா.. பர்மிஷன் ல தான் வந்திருக்கார்... அதுக்குள்ள நீயும் சாப்பிட்டு ரெஸ்ட் எடு... சாயந்தரம் ரெண்டு பேரும் எங்கயாவது ஜாலியா ஊரச் சுத்திட்டு வாங்க...

நீங்க ரித்து கிட்ட பேசிட்டு வாங்க மாப்பிள்ளை... நான் வண்டில இருக்கேன்... நாசூக்காய் செல்வராஜன் இடத்தை விட்டு நகர...

டேய் திருடா... ஈவினிங் எங்க போலாம் சொல்லுடா... அவன் கழுத்தைச் சுற்றி தன் கைகளை மாலையாய் போட்டபடி ரித்திகா கேட்டுக் கொண்டிருந்தாள்...

என்னடி... புதுசா டா போட்டு பேசறே... விளையாட்டாய் விஷ்வா மிரட்ட...

எனக்கு லவ் மூட் அதிகமாயிட்டா அப்படிதாண்டா பேசுவேன்... ரித்திகா அவன் காதோடு சொல்ல...

ஹூம்... எனக்கு லவ் மூட் அதிகமானா என்ன ஆகும் தெரியுமா...? விஷ்வா அவள் இதழ்களை நோக்கிக் குனிய...

ஐயோ அப்பா... வேண்டுமென்றே கத்தினாள் ரித்திகா...

பை... என்று அவசரமாக வாசலுக்கு ஓடினான் விஷ்வா... விழுந்து விழுந்து சிரித்தாள் ரித்திகா.

இரண்டு நாள் மூணார் டூர் முடிந்து மீனாட்ஷி வீடு திரும்பிய போது செல்வராஜன் தன் மகளின் காதல் விவகாரங்களை தெரிவிக்க... ஆகாயத்திற்கும், பூமிக்குமாக குதித்தாள் மீனாட்ஷி...

நான் என்னவெல்லாம் கனவு கண்டுக்கிட்டு இருக்கேன்... உன்ன அமெரிக்கால இருக்கற பையனுக்குக் கட்டிக் குடுக்கணும்... என் பொண்ணு அமெரிக்கால இருக்கறான்னு பெருமையா சொல்லிக்கணும்... நம்ம சொந்த பந்தத்துல எத்தன பேர் வெளிநாட்ல இருக்காங்க... மீனாட்ஷி புலம்பிக் கொண்டே போக...

விஷ்வா நினைச்சாலும் வெளிநாட்டுக்கு ட்ரான்ஸ்பர் வாங்கிட்டு போக முடியும்... அவங்க வங்கிக் கிளைகள் வெளிநாட்ல இல்லையா என்ன... சும்மா யாரோ எதுவோ சொல்றாங்கன்னு நீயும் அதையே உளறிகிட்டு இருக்காதம்மா... எந்த நாட்ல இருக்கோம்னு முக்கியம் இல்ல... வாழ்க்கைப்படற வீடு நம்பள சந்தோஷமா வெச்சிக்குதாங்கறது தான் எனக்கு முக்கியம்... விஷ்வா வீட்ல இருக்கறவங்க எல்லாருமே பரஸ்பர அன்புக்கும், குடும்ப அமைதிக்கும் இம்பார்டன்ஸ் தர்றவங்க... கடைசி வரைக்கும் வாழ்க்கைக்கு நிம்மதி தரப்போறதும் அதுதான்... என் முடிவு யாருக்காகவும் மாறாது...

ஆணி அடித்தார் போல் ரித்திகா சொல்லிவிட... இரண்டு நாட்கள் உர்ரென்று உராங்குட்டான் போல் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்த மீனாட்ஷி இனி மகளின் பிடிவாதத்திற்கு முன் தன் பிடிவாதம் செல்லாது என்று இறங்கி வந்தாள்... இரு வீட்டாரும் கலந்து பேசி ஒரு சுபயோக சுபதினத்தில் திருமண வைபவத்தை நடத்துவது என்று முடிவானது...



சுற்றமும், நட்பும் புடை சூழ, எள் விழும் அளவுக்கு கூட இடமில்லாதபடி கல்யாண மண்டபம் நிரம்பி வழிந்தது... செல்வராஜன் அந்தஸ்துள்ள தொழிலதிபர்... ஸ்ரீதரன் புகழ் பெற்று விட்ட ஆடிட்டர்... விஷ்வாவின் வங்கித் தோழர்களின் கூட்டம்... கல்லூரித் தோழர்களின் கும்பல்... ஸ்ரீதரன் - ராகமாலிகாவின் உறவினர்கள்...

செல்வராஜன் - மீனாட்ஷியின் குடும்ப உறவினர்கள்.... செல்வராஜன் பேக்டரியில் வேலை பார்ப்பவர்கள்... ஸ்ரீதரன் அலுவலகத்தில் பயிற்சி பெறுபவர்கள்... அவனுடைய வாடிக்கையாளர்கள்... அக்கம் பக்க நண்பர்கள்... தெரிந்தவர்கள்... ரிதிகாவின் தோழிகள் என்று மண்டபமே நிரம்பி வழிய... சுபமுஹூர்த்த நேரத்தில் அனைவரது ஆசியுடனும் செல்வி.ரித்திகா செல்வராஜன்.... திருமதி.ரித்திகா விஷ்வாவாக பதவி உயர்வு பெற்றுவிட... அனைவரது ஆசிகளும் அட்சதை மழையாய் பொழிந்து கொண்டு இருந்தது...

மண்டபத்தில் செய்ய வேண்டியச் சடங்குகள் முடிந்து வீட்டிற்கு முறைப்படி மணமக்களை அழைத்து வர... ஸ்ரீதரன் வீட்டு ஐதீகப்படி பாலும், பழமும் கொடுத்து மணமக்களை வரவேற்றாள் ராகமாலிகா... உறவுகளின் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக விடைபெற... ஸ்ரீதரன் - செல்வராஜன் இருவீட்டார் மட்டுமே இருந்தார்கள்... அன்று மாலை வரை ஸ்ரீதரன் வீட்டில் இருந்த விஷ்வாவும் - ரித்திகாவும் சாந்திமுஹூர்த்தம் பெண்வீட்டில் தான் நடைபெறவேண்டும் என்ற சாங்கியத்தால் மாலை ஏழு மணி அளவில் செல்வராஜன் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட... மீதமிருந்த உறவுகளின், தோழிகளின் கேலி கிண்டல்களுக்கு நடுவே முதலிரவு அறைக்குள் காலடி எடுத்து வைத்தாள் ரித்திகா... அறைக்குள் கால் வைக்கும் முன் லேகா அவள் காதில் ஏதோ கிசுகிசுக்க அவளைச் செல்லமாக முறைத்துவிட்டுப் போனாள் ரித்திகா...

மூடப்பட்ட அறையினுள் ஏசியின் குளிர் சில்லென்று தாக்க... அவளுக்காக பார்த்துப் பார்த்து வடிவமைக்கப்பட்ட தேக்கு மர கட்டில் ரோஜா மற்றும் மல்லிகை மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது... கட்டிலின் அலங்கார வளைவில் கை ஊன்றியபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் விஷ்வா... அளவுக்கு அதிகமான அலங்காரங்கள் எதுவும் இல்லாமல் ஆழ்கடலின் அமைதி போல் காற்றில் ஆடிய கூந்தல், கூந்தலில் தொங்கும் மல்லிகைச் சரங்கள், காதில் தொங்கிய சிறிய மாதுளை நிற ட்ராப்ஸ்... கழுத்தில் பளிச்சென்று தெரிந்த புதிய தாலிக் கயிறு, அதற்கும் மேல் நெஞ்சைத்தொடும் ஒற்றைச் சங்கிலி... அதில் V என்ற எழுத்து மாதுளை நிறக் கற்களால் பொறிக்கப்பட்ட தங்க டாலர்... அவள் அணிந்திருந்த மெரூன் நிறப் பட்டுக்கு ஏற்ற கல்வளையல்கள்... மெல்லிய ஒலி எழுப்பும் கால் கொலுசு... தலையில் இருந்து கால் வரை பார்வையாலேயே அளந்து கொண்டு இருந்தான் விஷ்வா...

விஷ்வா... விஷ்வா... இரண்டு முறை அவள் அழைத்தபிறகு தான் தன் ரசனையில் இருந்து வெளியே வந்தான் விஷ்வா... அவள் நீட்டிய பால் சொம்பை வாங்கி அப்படியே அருகில் இருந்த மேஜை மீது கொலு வைத்தவன்... அடுத்த நிமிடம் அவளை தன் கரங்களுக்குள் சிறைப்பிடித்தான்... சூடியிருந்த மல்லிகைச் சரம் அவனுக்குள் சூடேற்ற... அவள் காதோரம் படிந்த அவன் உதடுகள் அவளையும் நெகிழ வைத்துக் கொண்டு இருந்தது... காதல் தேவனின் ஆலிங்கனத்தில் இருவரும் தாம்பத்திய வாழ்க்கையில் அடியெடுத்து வைக்க... இரவின் விளையாட்டு விடிந்தது கூடத் தெரியாமல் இருவரையும் அடித்துப் போட்டது போல் உறங்க வைத்தது.

உடம்பின் வலியை மீறி கண் விழித்தபோது காலை ஏழு பத்து என்று கடிகாரம் உணர்த்தியது... இறுக்கமாக அணைத்திருந்த விஷ்வாவின் கரங்கள் அவளை எழவிடாமல் தடுக்க... அப்படியே படுத்தபடி அவனையே பார்த்துக் கொண்டு இருந்தாள் ரித்திகா... இன்னமும் ஆழ்ந்த உறக்கத்தில் தான் இருந்தான்... முதல் முதலில் அவனை வங்கியில் பார்த்ததில் இருந்து நேற்று இரவு அவன் காம விளையாட்டை ரசித்தது வரை எல்லாமே கனவு போல இருந்தது... அடர்த்தியான ரோமங்கள் நிறைந்த அவன் மார்பில் முகம் பதித்துக் கொண்டாள் ரித்திகா... அவன் மார்பில் புரண்ட தங்கச் சங்கிலி அவள் கன்னத்தை உரசியது...

என்னடா... தூக்கம் கலைஞ்சு போச்சா...? அவள் நெற்றியில் உதடு பதித்து விஷ்வா கேட்க...

ம்ம்... நீங்க என்ன அதுக்குள்ளே கண் முழிச்சிட்டீங்க... அமலா பால், ஹன்சிகா எல்லாம் கனவுல வந்து போயாச்சா....ரித்திகா வேண்டுமென்றே கேட்க...

அதெல்லாம் கலைந்து போன கனவுகள்... என்னைக்கும் கலையாத கனவு நீ மட்டும் தான்... அவள் கூந்தலை அளைந்தபடி விஷ்வா சொல்லிக் கொண்டிருக்க...

விஷ்வா... குளிச்சிட்டு கீழ போகணும்... ரொம்ப நேரம் கழிச்சு இறங்கி போனா சங்கடமா இருக்கும்...

ம்ம்... தாராளமா... குடுக்க வேண்டியதக் குடுத்துட்டு நீ போகலாம்... விஷ்வா அவளை உசுப்பேற்ற... அவன் கன்னத்தில் முத்தமிட்டு எழ முயன்றாள்... அவன் பிடி மேலும் இறுக...

என்ன விஷ்வா... ட்யூ கட்டியாச்சு இல்ல... விடுங்க... ரித்திகா அவன் பிடியில் இருந்து விடுபட முயல...

ஹூம்... அதெல்லாம் பிபோர் மேரேஜ்... இனிமே நான் எப்போ கேட்டாலும் புல் செட்டில்மென்ட் தான்... காதல் தேவன் எழுதி வைத்த அடுத்த அத்தியாயம் மீண்டும் ஒரு காதல் காவியமாய் அங்கே அரங்கேறிக் கொண்டு இருந்தது...

அலுப்பு தீர குளித்து முடித்து கீழே இறங்கி வந்தபோது மணி ஒன்பதை தொட்டிருந்தது...

என்னம்மா... மாப்பிள்ளை எழுந்தாச்சா...? டிபனுக்கு நேரம் ஆகுதே... பெண்ணிடம் மெல்லிய குரலில் மீனாட்ஷி வினவ...

இப்போதான் குளிக்க போனார்... வர லேட் ஆகும்... என்று ரித்திகா வெட்கத்துடன் சொல்ல... மகளின் தயக்கம் தாய்க்கு புரிய...

சரி... டிபன் நீ மாடிக்கே கொண்டு போயிடு... நேரம் கழிச்சு இங்க வர சங்கடமா இருக்கும்... மகளிடமே டிபனைக் கொடுத்து அனுப்பினாள் மீனாட்ஷி.

மூன்று நாட்கள் தாய் வீட்டில் இனிமையாக கழிந்து விட... மீண்டும் விஷ்வாவுடன் அவள் கிளம்பியபோது... செல்வராஜன் - மீனாட்ஷி இருவருக்குமே கண்ணீரை அடக்க முடியவில்லை...

இதே ஊர்ல தானம்மா இருக்க போறேன்... ரெண்டு நாளைக்கு ஒரு முறை வந்திடறேன்... சிரிச்சிக்கிட்டு சந்தோஷமா அனுப்பி வைம்மா... என்று ரித்திகா பலவாறாக சமாதானப்படுத்திய பிறகு... பிரிய மனமில்லாமல் அனுப்பி வைத்தனர்...

விஷ்வா இரண்டு மாத விடுமுறையில் இருக்க... உறவினர் வீட்டு விருந்து, குல தெய்வம் கோவில் என்று வரிசையாக சடங்கு சம்பிரதாயங்கள் இருந்து கொண்டே இருந்தன... இதற்கு நடுவே தாலி பிரித்துக் கோர்க்கும் வைபவமும் நடந்தேற... அப்படி இப்படி என்று முழுதாக இருபது நாட்கள் உருண்டோடி விட்டது.

இதற்குள் செல்வராஜன் தன் மகளும், மருமகனும் நைனிடால் செல்ல ஹனிமூன் பேக்கேஜ் புக் செய்து இருந்தார்... நியூடெல்லி சென்று அங்கிருந்து வாடகைக் கார் எடுத்து நைனிடால் செல்வதாக ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது...

சின்ன வயசுல இருந்தே அவளுக்கு ப்ளைட் ட்ராவல் அலர்ஜி மாப்பிள்ளை... ஒன்னு வாமிட் பண்ணிடுவா... இல்ல மயக்கம் வருதும்பா... அதுனால டெல்லி வரைக்கும் ஏசி கோச்தான் புக் பண்ணி இருக்கேன்... அவளையும் பத்திரமா பார்த்துக்கோங்க... செல்வராஜன் தன் மகளைப் பற்றி கவலைப்பட...

தான் பார்த்துக் கொள்வதாக வாக்களித்தான் விஷ்வா...

அன்று மாலை கடற்கரைக்கு சென்றுவிட்டு அப்படியே ஊருக்கு செல்ல சில ஸ்வெட்டர்களும் வாங்க வேண்டி இருந்தது... தருணையும் அழைத்துக் கொண்டு விஷ்வாவும், ரிதிகாவும் காரில் கிளம்ப...

சித்தப்பா... எனக்கு ஒரு டவுட் க்ளியர் பண்ணு... என்று ஆரம்பித்தான் தருண்... ரிதிகாவின் மடியில் அமர்ந்தபடி அவன் கேட்க...

என்னடா...? சிரித்துக் கொண்டே விஷ்வா கேட்க...

கொஞ்ச நாள் முன்னாடி இவங்கள ரிது அக்கான்னு தான கூப்பிட்டேன்... இப்போ ஏன் சித்தின்னு கூப்பிட சொல்றாங்க...? நான் என் பிரெண்ட்ஸ் கிட்ட கூட கேட்டேன்... அவங்களுக்கும் தெரியல... தருணின் பேச்சு சிரிப்பை வரவழைக்க...

சித்தப்பா பொண்டாட்டிய சித்தின்னு தான் கூப்பிடணும்... சரியா... அதுக்குக் காரணம் எல்லாம் கேக்க கூடாது... என்றபடி ரித்திகா தன் ஹேன்ட் பேக்கில் இருந்து இரண்டு சாக்லேட்டுகளை எடுத்து தருணிடம் கொடுத்தாள்... இதற்கு மேல் ஏடாகூடமாக கேள்வி கேட்டால் என்ன பதில் சொல்வது என்று அவளுக்கு பயம்...

இன்னும் இந்த சாக்லேட் குடுக்கற பழக்கத்த உன் சித்தி விடலைடா... விஷ்வா குறும்பாகச் சொல்ல...

என்ன விஷ்வா... சின்ன பையன் கிட்ட இதெல்லாம் பேசிகிட்டு... என்று ரித்திகா சிணுங்க...

அதே சின்ன பையன் கிட்ட தான் மேடம் காதல் தூது அனுப்புனீங்க... அதுக்குள்ள மறந்துடுச்சா என்ன... விஷ்வா அவளை மடக்க...

அதுக்குதான் அன்னைக்கு ஈவினிங் போன்ல கத்தி தீத்துட்டீங்களே... அப்புறம் என்னவாம்... இருவரும் காதல் நினைவுகளில் மூழ்கி இருக்க... தருண் சாக்லேட்டை வாயில் போட்டு குதப்பிக் கொண்டு இருந்தான்...

அன்று விஷ்வாவும், ரிதிகாவும் ஹனிமூன் புறப்படும் நாள்... ரயில்வே ஸ்டேஷனுக்கு செல்ல இன்னும் ஒரு மணி நேரமே இருந்தது... எடுத்து வைத்த லகேஜ் எல்லாம் மீண்டும் ஒருமுறை சரி பார்த்துக் கொண்டு இருந்தாள் ரித்திகா... விஷ்வா தன் ATM மற்றும் கிரெடிட் கார்டுகளை சரி பார்த்துக் கொண்டிருக்க... வழியில் சாப்பிடுவதற்கு தேவையான உணவுகளை ராகா பேக் செய்து கொண்டிருந்தாள்... தருண் நடக்கும் அமளிகளை வேடிக்கை பார்த்தபடி உட்கார்ந்திருந்தான்... செல்வராஜனும் - மீனாட்ஷியும் நேரடியாக ஸ்டேஷனுக்கே வருவதாகச் சொல்லி இருந்தார்கள்... ஸ்ரீதரன் புதுமணத் தம்பதிகள் இருவரையும் ரயில்வே ஸ்டேஷனில் விட்டு வருவதற்காக தயார் ஆகிக் கொண்டு இருந்தான்...

ரிதி... ட்ரெயின் டிக்கட்ஸ் எங்கடா...? என் பர்ஸ்ல வெச்சிருந்தனே...! விஷ்வா குரல் கொடுக்க...

அப்போதுதான் ஞாபகம் வந்தவளாய் தலையில் அடித்துக் கொண்டாள் ரித்திகா... சாரி விஷ்வா... எடுத்து பார்த்துக்கிட்டு இருந்தேன்... அப்படியே டிரெஸ்ஸிங் டேபிள் மேல வெச்சிட்டேன்... கொண்டு வரேன் இருங்க... தடதடவென்று படி ஏறியவள் டிக்கட்டுகளை எடுத்துக் கொண்டு அதே வேகத்தில் தடதடவென்று கீழே இறங்க... எதிர்பாராத தருணத்தில் கால் சறுக்கி படிகளில் உருண்டாள்... அம்மா... என்று அலறல் சத்தம் கேட்டு எல்லோரும் ஓடிவர... அதற்குள் படியின் நுனியில் தலை மோதி ரத்தம் வழிய ஆரம்பித்தது...

வலி தாங்காமல் மயங்கிவிட்டவளை காரில் அள்ளிப் போட்டுக் கொண்டு விஷ்வா ஆஸ்பத்திரிக்கு பறக்க... பின்னாலேயே வீட்டைப் பூட்டிக் கொண்டு மற்றொரு காரில் ஸ்ரீதரன், ராகா, தருண் மூவரும் செல்ல... செல்வராஜனுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவரும் மீனாட்ஷியோடு அங்கே வந்து சேர... ரிதிகாவுக்கு உள்ளே ட்ரீட்மென்ட் நடந்து கொண்டிருந்தது.

என்ன ஸ்ரீதரன்... ஊருக்கு கிளம்பற நேரத்துல என்ன இப்படி... எப்படி ஆச்சு...? செல்வராஜன் தவிப்புடன் கேட்க...

நடந்ததைச் சொன்னான் விஷ்வா... அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய நேரத்தில் இப்படி ஒரு சம்பவம் நடந்தது எல்லோருக்கும் வருத்தமாக இருந்தது...

இதற்குள் டாக்டர் ட்ரீட்மென்ட் அறையில் இருந்து வெளியே வர... "கீழ விழுந்ததுல நெத்தில லைட்டா வெட்டு பட்டிருக்கு... பயப்படற மாதிரி ஒண்ணும் இல்ல... லைட்டா மயக்க மருந்து குடுத்து ரெண்டு தையல் மட்டும் போட்டிருக்கேன்... மயக்கம் தெளிஞ்சதும் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போலாம்... நோ நீட் டு வொரி" டாக்டரின் பேச்சு சற்று தெம்பைக் கொடுத்திருந்தாலும் ஹனிமூன் கிளம்ப வேண்டிய நேரத்தில் இப்படி ஆனது எல்லோருக்குமே வருத்தமாக இருந்தது...

தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்றே என்று ஆசுவாசப்பட்ட போது விஷ்வா மட்டும் தன் கைகளில் முகம் புதைத்தபடி அமர்ந்திருக்க... ஆதரவாக தன் தம்பியின் தோள்களை தட்டிக் கொடுத்தான் ஸ்ரீதரன்...

சற்று நேரத்தில் மயக்கம் தெளிய ரிதிகாவை கைத்தாங்கலாக அழைத்து வந்தாள் மீனாட்ஷி...

நம்ம வீட்டுக்கே கூட்டிட்டு போயிடலாங்க... உடம்பு சரியானதும் மாப்பிள்ளையோட அனுப்புவோம்... மீனாட்ஷி செல்வராஜனிடம் சொல்ல... அவர் விஷ்வாவைப் பார்த்தார்...

சரி மாமா... அவளுக்கும் அம்மாவோட இருந்தா ப்ரீயா இருக்கும்... விஷ்வா சம்மதம் தெரிவிக்க... எதையும் பேசும் நிலையில் ரித்திகா இல்லை... அரைக் கண்கள் மூடி இருக்க... விஷ்வாவின் தோள் மேல் சாய்ந்தபடி நின்றவளை கைத்தாங்கலாக காருக்கு அழைத்துச் சென்றான் விஷ்வா...

போய் நல்லா ரெஸ்ட் எடும்மா... நானும் மாமாவும் நாளைக்கு வந்து பாக்கறோம் என்று ராகா சொல்லிக் கொண்டிருக்க...

நாம என்னவோ நினைக்க என்னவோ நடந்து போச்சு ஸ்ரீதரன்... வருத்தத்தோடு பேசிக் கொண்டு இருந்தார் செல்வராஜன்... மாப்பிள்ளை லீவ்ல தானே இருக்கார்... எங்க வீட்லயே ஒரு வாரம் அவரும் இருக்கட்டும்... என்று அவர் விருப்பம் தெரிவிக்க... சரி என்று தலை ஆட்டினான் ஸ்ரீதரன்.

மாடி ஏற வேண்டாம் என்று கீழே இருந்த அறையிலேயே ரித்திகா படுத்துக் கொள்ள... தலையில் இருந்த கட்டு அவ்வப்போது வலி ஏற்படுத்த... அன்று இரவு மருந்து மாத்திரைகளின் உதவியோடு உறங்கிப் போனாள் ரித்திகா...

மறுநாள் காலையில் மீனாட்ஷி செய்து கொடுத்த டிபனை ரிதிகாவுக்கு தான் தான் ஊட்டுவேன் என்று விஷ்வா அடம் பிடிக்க...

எனக்கு தலைல தான அடிபட்டிருக்கு... கை கால் எல்லாம் நல்லாத் தானே இருக்கு... நானே சாப்பிடறேன் விஷ்வா... என்று ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தாள் ரித்திகா...

மீனாட்ஷி... இங்க வந்து பாரு... என்ற செல்வராஜனின் கூக்குரல் வீடு முழுவதும் எதிரொலிக்க...

என்னவோ ஏதோ என்று விஷ்வா, ரித்திகா, மீனாட்ஷி மூவரும் ஓடிவர... அங்கே தொலைக்காட்சி திரையில் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது... விஷ்வாவும், ரிதிகாவும் முன் தினம் ஹனிமூனுக்காக பயணம் செய்திருக்க வேண்டிய ஏசி ரயில் பெட்டிகள் தீயில் கருகி சாம்பல் ஆகியிருந்த காட்சி ஒளிபரப்பாகிக் கொண்டு இருந்தது... ஒரு பெட்டியில் பற்றிய தீ மளமளவென்று அனைத்து பெட்டிகளுக்கும் பரவ நடு ஜாம நேரத்தில் இந்த கோரச் சம்பவம் நடந்ததாக தகவல் வெளியிட்டுக் கொண்டு இருந்தார்கள்... உள்ளே இருந்த அனைவரும் நெருப்பில் எரிந்து கரிக்கட்டை ஆன செய்தியை நெஞ்சம் நடுங்க பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் ராகா, ஸ்ரீதரன்,



தருண் மூவரும் வந்து சேர...

ந்யூஸ் பாத்தீங்களா ஸ்ரீதரன்...? நேத்து ஒரு வேளை ரிதிக்கு இந்த மாதிரி ஆகாம இருந்திருந்தா இன்னைக்கு என் பொண்ணு, மாப்பிள்ளையோட நிலைமை என்ன...? நினைச்சுப் பாக்கவே நடுங்குதே... செல்வராஜன் தளர்வாய் சோபாவில் அமர...

வீட்ல இந்த ந்யூஸ் பாத்துட்டு தான் நாங்களும் சீக்கிரம் கிளம்பி வந்தோம்... பெரிய கண்டத்துல இருந்து தப்பிச்சிருக்காங்க... எந்த ஜென்மத்துல செஞ்ச புண்ணியமோ... ராகா மீனாட்ஷியிடம் சொல்லிக் கொண்டிருக்க... மீனாட்சியின் விழிகளில் கண்ணீர் அருவியாய் கொட்டியது... நேராக பூஜை அறைக்கு சென்று விளக்கேற்றினாள்.

எதுவும் பேசத் தோன்றாமல் விஷ்வா தொலைக்காட்சித் திரையை வெறித்துக் கொண்டிருக்க... காற்று நுழைவதற்குக் கூட இடமில்லாமல் அவனை இறுகப் பற்றி இருந்தாள் ரித்திகா...

ஒரு வாரம் கழித்து தையல் பிரித்த பிறகு மீண்டும் விஷ்வாவும், ரிதிகாவும் தங்கள் வீட்டுக்கு புறப்பட்டு சென்றனர்...

ஏன் ரித்திகா... அந்த ட்ரெயின் ஆக்சிடென்ட்டையே நினைச்சிக்கிட்டு இருந்தா எப்படி...? வேற எங்கயாவது போயிட்டு வரலாம் இல்ல... இப்போ போனா தான்... அப்புறம் குழந்தைன்னு ஆயாச்சுன்னா எங்கயும் நகர முடியாது... ராகமாலிகா வருத்தத்தோடு சொல்ல...

வேண்டாங்கா... நைனிடால் எங்க போயிடப்போகுது... மத்த ஊரெல்லாம் எங்க போயிடப் போகுது... உங்கக் கொழுந்தன் இங்க பண்ற சேட்டையத் தான அங்கயும் பண்ணப் போறாரு... முதல்ல நம்ம சேப்டிய பாப்போம்கா... நம்ப வீடு தான் நமக்கு சொர்க்கம்... இந்த வீட்டுக்கு என்னக்கா குறைச்சல்...? எப்பவும் கலகலன்னு சந்தோஷமாத் தான இருக்கோம்... ரித்திகா மனப்பூர்வமாய் சொல்லிக் கொண்டிருந்த போதே ஸ்ரீதரன் அங்கு வந்து சேர...

விடு ராகா... இந்த அனகோண்டா பேமிலிக்கு இன்னொரு ஜூனியர் வந்த பிறகு மூணு பேரும் சேர்ந்து போவாங்களா இருக்கும்... என்று ஸ்ரீதரன் கலாய்க்க...

விஷ்வா... அனகோண்டா மேட்டர்லாம் சொல்லிட்டீங்களா...? ரித்திகா அவன் மீது பாய...

மிளகாய் பொடி மேட்டர் கூட சொல்லிட்டாரு... என்று ராகா அவள் பங்குக்கு வார...

விஷ்வா எழுந்து ஓட... கையில் கரண்டியோடு ரித்திகா விஷ்வாவைத் துரத்த... இவர்கள் இருவரின் அமர்களத்தையும் கை தட்டி ரசித்துக் கொண்டு இருந்தான் தருண்...

ஸ்ரீதரன் - ராகமாலிகா, விஷ்வா - ரித்திகா, தருண்... இனி வரப்போகும் குட்டி விஷ்வா அல்லது குட்டி ரித்திகா இவர்கள் அனைவரும் எப்போதும் இதே போல் சந்தோஷமாக, நிம்மதியாக, ஒற்றுமையாக, பாதுகாப்பாக வாழ நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து வாழ்த்துவோம்...!!!

**பின்னுரை:**
இந்தக் கதையை சுபமாகத் தான் முடிக்க வேண்டும் என்பது நம் பெண்மைத் தோழிகளின் விருப்பம். அவர்களின் விருப்பப்படியே மகிழ்ச்சியான குடும்பக் கதையாக முடித்துள்ளேன். ஆனால் இது போன்ற அகால விபத்துகளில் மீண்டு வர முடியாமல் போனவர்களைப் பற்றிய வருத்தம் என் மனதில் எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. இவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? இவர்களும் ஆயிரம் கனவுகளுடன் பிறந்தவர்கள் தானே... வளர்ந்தவர்கள் தானே... வாழ நினைத்தவர்கள் தானே...?! இதற்கெல்லாம் காரணம் விதியா, சமூக விரோதிகளின் சதியா? உறவுகளை விட்டு, உடல் கருகி, இந்த உலகை விட்டே மறைந்து, நினைவுகளாய் மட்டுமே எஞ்சி நிற்கும் தூய ஆத்மாக்களுக்கு இந்தக் கதை சமர்ப்பணம்...!!!

வாய்ப்பிருந்தால் பெண்மை மின் இதழில் மீண்டும் சந்திப்போம்... என்றும் அன்புடன் சுகந்திரமேஷ்.



# January Month Contest Winners

**Penmai.com conducts contests each month and awards the winners with attractive prizes.**

**Here is the announcement for the last month contest winners.**

**1. Popular Thread - Marriage, Family & Relationship winner - JV_66 (Jayanthy) for the thread "Hey!!! Honey!!! I love this character of yours".**

**2. Top answerers contest winner - Gayathri Arun.**

**3. Penmai Special Kolam Contest Winner - Nalini Narayanan.**



**4. Neeya Naana Winner - Vijivedachalam.**




**5. Penmai's Super Star - Best Poet - Shaalam**




---

# February Month Contest

**Popular Thread Contest - Penmai's Hub**

**Penmai's Special Contest - Valentines day Haikoo Poem Contest**

**Neeya Naana - February Month contest**
இந்த மாதத்திற்கான தலைப்பு, **காதல் திருமணங்களை சொந்தங்கள் மற்றும் சமூகம் அங்கீகரிக்கின்றதா? இல்லையா?**

**Top answerers contest !!!**
Every month, questions asked by the users will be indexed. The top answerer will be selected on the basis of the quality of the answers given by them to the questions asked by the questioner.

**Penmai's Super Star of the Month.**
The Super Star of the Month, will be a surprise to everyone. **Penmai Panel** will select the best player of Penmai every month, it may be like, **Best Motivator, Best Blogger, Best Poet, Best writer, Best Creator, Best Adviser etc. You can play any role like this, the thing you have to do is to give your best.**

For Advertisements Please Contact support@penmai.com or call us at 8344 143 220

Submit your works or questions to Penmai.com
Write us your feedback to admin@penmai.com

For advertisement please contact - 8344 143 220